# கோபுர வாசல்

University of Jaffna
894.8112
MUR
119814(AR; Main)

முருகையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. Kailasapathy

கைலாசுக்கு
அன்புடன்
முருகையன்
12/6/69

894.8112
MUR

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
SRI LANKA

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
SRI LANKA

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரவாசல்

2007

UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA

894.8112
MUR

AR

ARCHIVES

## கவிதை நாடகம்

Donated by:-
PROF. K. KAILASAPATHY

முருகையன்

University of Jaffna
119814
Library

119814

செய்யுட்கள வெளியீடு,
149/3, காலி வீதி,
கொழும்பு - 4

119814

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு 1969

உரிமைகள் ஆசிரியருக்கே.

ஊடு போய் எதையும் உள்புகுந் தேறி
ஓடி ஓடி அலகும் முனை கொண்ட
மோடி யான வடிவேலது வாங்கி
மூசி வீசுபவர் பாவலர் ஆவார்.

குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நந்தனுர் என்ற திருநாளைப்போவார் சரிதை தமிழகத்துக்குப் புதியதன்று. சேக்கிழார் பெருமான் ஒரு சில திருவிருத்தங்களிலே இச்சரிதையைப் பாடினுர். அண்மைக் காலத்திலே கோபால கிருஷ்ண பாரதியார் இக்கதையைக் கீர்த்தனைகளாக அமைத்துப் பாடிப் பிரசங்கம் செய்தார். அக்கீர்த்தனைகள் புத்தக வடிவிலும் கிடைக்கும். இப்போது 'கோபுரவாசல்' என்ற நாடகமாக இதை ஆக்கியுள்ளேன்.

நாடகங்கள் பல வகையின. இது கவிதை நாடகமாகும். பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மனேன்மணீயத்துக்குப் பிறகு வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும் வேறு சில புலவர்களும் எழுதிப் பார்த்ததொரு நாடகவகையே கவிதை நாடகம் என்பது. திருச்சிக் கலைஞர் கலைவாணனும், ச. து. சு. யோகியாரும் திருச்சிற்றம்பலக் கவிராயரும் வேறும் சிலரும் தென்னகத்திலே கவிதை நாடகம் எழுதிப் பார்த்துள்ளனர்.

இலங்கையில் வானெலிக்காகவே முதன்முதலிற் கவிதை நாடகம் எழுதப்பட்டது. 'நித்திலக் கோபுரம்' என்ற அந்த நாடகத்தை 1953—இலே நான் எழுதினேன். அது ஒலிபரப்பான பின்னர், 'அந்தகனேயானுலும்', 'கலைக்கடல்', 'பில்கணீயம்', 'தரிசனம்' முதலான நாடகங்களை வானெலிக்கென எழுதினேன். 'வந்துசேர்ந்தன' என்ற என் கவிதை நாடகம் வாதவூரடிகள் வரலாற்றேட்டில் ஓர் இதழை விரித்துக் காட்டுவது. இதற்கிடையில் நண்பர் 'மஹாகவியும்', சத்தியசீலனும், நீலாவணனும், திமிலைத்துமிலனும் வேறு பிறரும் இவ்விலக்கிய வடிவில் அக்கறை காட்டுவாராயினர்.

இங்ஙனம் கவிதை நாடகம் இக்காலத்து இலங்கையில் மெல்ல மெல்ல வேரூன்றி வந்ததாயினும், இது உரையாடலுக்கு முக்கியத்துவம் தரும் ஒலி நிகழ்ச்சியாகவே தலையெடுக்கத் தொடங்கிற்று. எழுதப்படும் நாடகங்களுட் பல வானெலிக்கென எழுதப்படுவதே இதற்குக் காரணம் போலும். கவிதை நாடகத்தை மேடையேற்றும் முயற்சி 1962—ஆம் ஆண்டிலே நடந்தது. உரையாடல்களோடு, மேடைச் செயற்பாடுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய கலைநிகழ்ச்சியாக, 'குற்றம் குற்றமே' என்ற என்னுடைய கவிதை நாடகத்தைத் திரு. கா. சிவத்தம்பி தயாரித்தார், அதற்குப் பின்னர் நீலாவணன் எழுதிய 'மழைக் கையும்', 'திமிலைத் துமிலன்' எழுதிய ஒரு கவிதை நாடகமும் மேடை யேறின. எனினும், கவிதை நாடகம் மேடைக்கென எழுதப் படுவது மிகவும் அருந்தலாகவே நடைபெறுகிறது.

இந்த நிலையில் முழுநேர மேடைக் கவிதை நாடகம் ஒன்றை எழுதவேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டாயிற்று. அந்த ஆசையின் பேறுதான் 'கோபுரவாசல்'. 'கோபுரவாசல்' இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி முடிக்கப்பட்டது. பல காரணங்களால் இது உடனடியாக மேடையேறாமல் எழுத்துப் பிரதியாகவே என்வசம் இருந்தது. இந்நாடகம் எழுதி முடிந்த பின்னர் ஈழத்துச் சமுதாய வாழ்வின் சூழலிலே ஒரு சில மாற்றங்கள் முனைப்பாகத் தோன்ற ஆரம்பித்தன. இந்த மாற் றங்களுடனும் இயக்கங்களுடனும் நாடகத்தை இசைவுபடுத்து வது மிகமிக அவசியம் என நான் கருதினேன், ஆகவே முத லில் எழுதப்பட்ட பிரதியிலே சிறுசிறு மாற்றங்கள் செய்வது அவசியமாயிற்று. இப்போது வெளியாகும் 'கோபுரவாசல்' திருந்திய வடிவம்பெற்ற நிறைவான நாடகமாக உள்ளது.

இதை நடித்துக் காண்பிப்பதற்கு நாடக மன்றங்கள் விரும் பலாம். அவ்வாறு செய்யவிரும்பும் நண்பர்களுக்கு ஒரு சில குறிப்புகளை இவ்விடத்திலே தெரிவிப்பது பொருத்தமாகும். நாடகத்தின் உரையாடல்கள் மிகவும் இலகுவான சொற்களால் ஆக்கப்பட்டுள்ளன. நடிக்கும்போது வசன நாடகங்களில் வச னத்தை எப்படி உச்சரிப்பீர்களோ அதே மாதிரி இதில் வரும் உரையாடல்களையும் உச்சரிக்க வேண்டும். கவிதையோசையை யும், யாப்பையும் பற்றி நடிகர்கள் அதிகம் கவலைபடத் தேவை யில்லை. வேண்டிய இடங்களிலே, வேண்டிய அளவுக்குக் கவிதை ஓசை நாடகத்தில் உண்டு. சொற்களின் இயல்பான ஓசையைக் கொண்டே கவிதை ஓசையைப் பின்னியிருக்கிறேன். ஆகவே சொற்களை முழுமையாக, அர்த்தம் தொனிக்க, அழுத்தங்களுட னும் நெகிழ்ச்சியுடனும் உச்சரிப்பீர்களானல் அதுவே போதும். கவிதை ஓசை தன்னைத்தானே கவனித்துக் கொள்ளும்.

உணர்ச்சிமயமான கட்டங்களில் இசையமைத்துப் பாடுவ தும் நல்லது. முக்கியமாக நந்தனாரின் பாட்டுகள் இசையுடன் பாடப்பட வேண்டியவை. இவைக்கு இசையமைக்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களைத் தூக்கிக் கொடுத்து அரவணைக்கும் வகையில் இசையமைக்க வேண்டும். முறையாக இசையமைக்க வசதியில்லாத நாடக மன்றங்கள், சொற்களை உணர்ச்சி பாவனையோடு நல்ல முறையிலே பேசியே நாடகத்தை நடத்தலாம். பொருத்தமில்லாத இசையைப் போட்டுக் குழப்புதல் கூடாது.

இறுதியாக, சூத்திரதாரன் பற்றி ஒரு சில வார்த்தைகள். பழங்கதையை எடுத்து நடத்தும்போது, அதை இக்கால மக்களின் எண்ணப் போக்குகளுடன் இசைவு காட்டி நடத்திச் செல்வது அவசியமாயிற்று. இதன் பொருட்டுப் படைக்கப்பட்டவனே சூத்திரதாரன். வடமொழி நாடகங்களிலும் இவன் வருவது கருதத் தக்கது. ஆனல் நமது நாடகத்துச் சூத்திரதாரன் சற்று வித்தியாசமானதொரு பணியினைச் செய்கிருன். நாடக ரசிகர்கள் நாடகத்துள் முழுமையாக அழுந்திவிடாது, தாங்கள் பார்ப்பது நாடகமே என்பதையும், அது சில செய்திகளை எடுத்துரைக்கும் நோக்கத்தை உடையது என்பதையும் மறந்துவிடாது, நாடக உணர்வு முழுக்கினின்றும் சற்று விலகியே இருத்தல் வேண்டும். இது நவீன நாடகர்களுள் ஒரு சாராரின் கோட்பாடாகும். மேற்படி விலக்கத்தைச் சாதிக்கும் கருவியாகவே இங்கு சூத்திரதாரன் அனுமதிக்கப்பட்டுள்ளான் என்று கருதுதல் வேண்டும். இந்த நாடகத்திலே திருநாளைப்போவாரின் சுற்றத்தையும் சூழலையும் சிறிது நுட்பமாகக் காட்ட முயன்றுள்ளேனுதலால், அவரது சூழலினின்றும் பிறப்பெடுத்து அக்காலத்துப் பின்னணியில் ஓங்கி நிமிர்ந்த அவரது ஆன்ம சொரூப விகசிப்பை, சாதாரண மக்களின் மறுசெயல்களுடன் அருகருகே வைத்து வியாக்கியானம் செய்வதற்கு வசதியாக நான் படைத்துக்கொண்ட ஒரு சாதனமே சூத்திரதாரன்.

நாடகத்தின் பிற அம்சங்கள் பற்றி இங்கு நான் எதுவும் கூற வேண்டியதில்லை. படித்துப் பார்ப்பவர்களும், நடிக்கக் காண்பவர்களும் அவற்றை உணர்வார்கள்.

கல்வயல்,
சாவகச்சேரி,
இலங்கை,
4 / 3 / 69.

இ. முருகையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடக மாந்தர்

—: o :—

**நந்தனர், மூத்து**—நந்தனரின் தாய், **வள்ளி**—நந்தனர் தங்கை, **மூத்தார்** — நந்தனர் மாமனர், **வேதியர், சாத்தனர்**—பூசாரியார், **சொறியன், புலையர்கள் சிலர்,** புன்கூரில் நந்தனரை வரவேற்கும் **சாமிநாதன், வாரியார், குமாரநாதன், வரதன் முதலானேர்,** சிதம்பரத்திலே நந்தனரை வரவேற்கும் **அப்பு தீட்சிதர், அந்தணர்கள் சிலர்.**

## முதலாம் அங்கம்

முதலாம் காட்சி — திருப்புன்கூர்ச் சிவாலயம்
காலை நேரம்

## இரண்டாம் அங்கம்

முதலாம் காட்சி — ஆதனூர் ; நந்தனர் வீட்டின் அயல் ; பொங்கல் பூசை நடைபெறும் கோயிலின் முன்புறம். பின்மாலை நேரம்.

இரண்டாம் காட்சி — வேதியர் வீடு.
காலை நேரம்.

மூன்றும் காட்சி — வேதியர் வீடு.
காலை நேரம்.

## மூன்றும் அங்கம்

முதலாம் காட்சி — சிதம்பரம் ; நடேசர் கோயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் அங்கம் — முதலாம் காட்சி

**சூத்திரதாரன் :** *(அவையோருக்கு வணக்கம் செலுத்தி)*
முன்னொரு காலத்திலே
தென்னக தேசத்திலே
ஆதனூர் என்றொரு சிற்றூர் இருந்தது
முன்னொரு காலத்திலே........
புலையர்கள் குடியில் வந்தார்
புண்ணியர் நந்தர் என்பார்
புன்கூர் நோக்கியே போகிறார் நந்தனார்
முன்னொரு காலத்திலே........
புன்கூரில் மக்கள் கூடிப்
போற்றியே வரவேற்றார்கள்
நந்தனார் கோபுர வாசலை நண்ணினார்
முன்னொரு காலத்திலே........

*[திரை விலகுகிறது. திருப்புன்கூர்ச் சிவாலயத்தின் கோபுர வாசலும் அதன் முன்றிலும். மூலமூர்த்தியின் காட்சியை மறைத்துக்கொண்டு பிரமாண்டமான நந்தியந்தேவர் காட்சி தருகிறார். சாமிநாதன், வாரியார், குமாரநாதன் முதலியவர்கள் நந்தனாரை வரவேற்பதற்குத் தயாராகிறார்கள். வரதன் ஓடோடி வருகிறான்.]*

**வரதன் :** வருகிறார் ஐயா, நந்தனார்.

**சாமிநாதன் :** எங்கே ?

**வரதன் :** உருகியபடியே உள்ளங் குழைந்து
தொண்டர் பல பேர் சூழ வருகிறார்.
கண்டதும் செய்தி உம் காதிலே சேர்க்க
ஓடி வந்தேன் உடனே !

**சாமிநாதன் :** ஆகா !
எவ்விடம் உள்ளார் இப்போது அடியார் ?

**வரதன் :** செவ்விய பெரியார் சீக்கிரம் இங்கே
வந்து சேருவர்.

**வாரியார் :** வாழிய சைவம் !

**சாமிநாதன் :** நந்தனார் என்ன நடந்தா வருகிறார் ?

**வரதன் :** செந்துவர் வாயுமை பங்களின் திருப்பெயர்
பாடும் பணியே பணியாம் அன்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லோர் நடுவே படர்ந்து சுற்றிட
நண்பர் தமது நடுவே, திருவடி
பெயர்த்து நடந்தே வருகிறுர்.

சாமிநாதன் : பெரியவர்
தெய்கீதம் சிறிது சிறிதாய்
அணுகி வருகிறதல்லவா ?

[ பாடலோசை இலேசாகக் கேட்கிறது. ]

வரதன் : ஆமாம்.

சாமிநாதன் : இணையிலா அடியவர் எம்பெருமானின்
கோபுர வாசலுக்கு அப்புறம் செல்லும்
சார்பிலே பிறந்தவர் அல்லர்; வெளியிலே
நின்றபடியே நெஞ்சம் குழைவராம்.

வாரியார் : ஆயினும், இந்த ஆலயத்துள்ள
நந்தியந்தேவரோ உருவிலே பெரியவர்.
மூலவர் தோற்றம் முழுமையும் மறைத்தே
கிடக்கிறுர். அந்தோ ! கிழமைக்கு உரிய
மெய்யடியாரின் விருப்பம் தீரக்
கண்கள் குளிரும் காட்சி கொடுக்கவும்
வல்லமை இல்லாதவராய் மகேசுரர்
வெட்கவா போகிறுர் ?

குமாரநாதன் : வேண்டாம் வீண் கதை.
உலகம் யாவையும் உண்டென ஆக்கியும்
நிலைபெற வைத்தும், நீக்கியும், நீங்கலா
அலகிலா ஆடலன், அமலன், வேதியன்
தலைவனும் அவனே தடைகளே அறியான்.
வரம்பில்லாத வல்லமை உடையவன்.
நிரந்தரமானவன்; நெற்றிக் கண்ணவன்.
ஆதலால், அவனுக்கு ஆகாக் காரியம்
யாதுமே இல்லை; அறிக வாரியார்.
ஆகையால், நடப்பதை அமைதியாய் இருந்து
காண்பது மட்டுமே செய்யத்தக்கதாம்.

சாமிநாதன் : நந்தனுர் வருகிறுர்; நகர்ந்து வழிவிடீர்.

[ அடியார் பலர் சூழ நந்தனுர் வருகிறுர். பாடுகிறுர். ]

குமாரநாதன் : வந்தனரா, அவர் ?

வரதன் : வாழிய நந்தனுர்.

நந்தனுர் : ( பாட்டு )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தையே, ஈசனே ! இறையவா, நாயினேன்
சிந்தைமேல் வந்தமர் சேவகா, சீவகா !

அரனே, பரனே, அந்தண் பெருமான்,
உரனே, வலனே, உலகின் நலனே
பரனே, புலனேர் பலர் கண்டறியா
வரனே, பவநாசகனே சிவனே.

விடை ஏறியவா, விசை வார் மிளிரும்
தடநீள் முரசம் தருவேன் — அருள்வாய்.
அடல்சார் அசுரர் புரம் நீறுபடத்
தொடுவாய் ஒரு புன்னகை, தூயவனே !

வாழ்வே, எனதாருயிரே, வலவா !
யாழ், வீணைகள் மேவிடு தந்திரிகள்
நாள்தோறும் நயந்து வழங்கிடுவேன்
தாழ்வாகிய தீவினையைத் தடிவாய்.

ஆராதனை செய்பவர் ஆதரவே
கோரோசனை நல்குவேன் கொண்டருள் தா.
தேரேன், அறியேன், சிறியேன், நிகரில்
வீரா, வினைவேர் அறுமாறு அருளே.

பாடுமின் தோழர்காள்; பரவுமின் அவன் கழல்
ஆடுமின், கூவுமின்; அரற்றுமின்: பிதற்றுமின்.
தேடுமின்; அன்னவன் செய்ய தாள் மலர்களே
சூடுமின் சிரமிசை; துயர் களைந்திடுமினே.

பிறவிப் பெருங்கடல் நீந்த அருள்பவன்
மறலிப் பயங்கரன், மன்றில் நடிப்பவன்.
அறநற் பெருஞ்செயல் அம்மை விரும்பிடும்
உறவைப் புனைந்தவன்; உண்மைப் பரம்பொருள்.

சிவலோகா ! உன் செய்ய திருவுருக்
கண்டு கண் குளிர்ந்து களிக்க நான் பெரிதும்
விரும்பினேன் ஐயனே; மெய்யனே, அருள்வாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தியந் தேவனுர் நடுவழிக் கிடக்கிருர்,
உயர்ந்த பரந்த உருவம் உடையராய் !
கோயிலில் அமர்ந்த உன் கோலம் என் விழியுற
ஆய ஒரு வழி அருள்க அப்பனே.
வழிமறைப்பு ஒழித்தருள் மால்விடை வாகனே.
ஒழிவிலாப் பழையனே, ஒருவனே, அருவனே !
அருவுருவுடைய ஐயா ! அருள் புரி.

அசரீரி : நந்தியந் தேவா, நந்தன் வந்துளான்.
சற்றே விலகுவாய். தரிசனம் கொடுப்போம்.

[நந்தியந்தேவர் வழிவிடத் தரிசனம் கிட்டுகிறது. பல்லியங்களும் இசைத்து இந்த அற்புதத்தை வாழ்த்துகின்றன. அன்பர்கள் பெருமுழக்க ஆரவாரம் செய்கிருர்கள்.]

பலரும் : அரோகரா, அரோகரா. அப்பனே அரோகரா !

குமாரநாதன் : தென்னுடுடைய சிவனே போற்றி.

பலரும் : எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

குமாரநாதன் : அப்பனே போற்றி; ஐயனே போற்றி.

பலரும் : முப்பொருள் தமக்குள் முதற்பொருள் போற்றி.

நந்தனுர் : குலம்பொல்லாதேன்; குடியும் பொல்லேன்.
குற்றமே பெரிதும் கொண்டவன், சிறியேன்.
நலம்பொல்லாதேன்; நானே கடையவன்.
நந்தியந் தேவரை நகரும்படியாய்
அருளினுய் ஆயின், ஐயனே உனது
திருவுளம் நினைந்து சிறியேன் குழைகிறேன்.

சாமிநாதன் : புறமுறு தொண்டரின் புந்தி நோகாமல்
இறையவன் அருளினுன் என்பது நோக்க,
இந்தப் புன்கூர் எய்திய மாட்சியை
எந்தப் பொன்னூர் எய்தியதுண்டாம் ?

வரதன் : உய்ந்தோம் அனைவரும், ஊரவர் நாமெலாம்.

[வரதன் முல்லை மாலையைக் கொண்டுவந்து நந்தனுருக்குச் சூட்டுகிருன்.]

வரதன் : நந்தனுரே ! இதோ, மாலையைப் பூணுக.

நந்தனுர் : என்செயலாவது யாதுமே இல்லை.
புன்கூர் முதல்வனே புதுமையைக் காட்டினுன்.
அன்பினுல் அவனையே அனைவரும் பாடுமின்.

சாமிநாதன் : முன்பு நாம் என்றுமே கண்டிலாப் புதுமையைக்
காட்டினீர் ஐயா ! கங்கையைச் சடையிடைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரந்தவர்க்கு அன்பர் நீர். ஆகையால், நாம் தொழும்
கடவுள் நீர் என்றே கருதி வணங்கினோம்.

**பலரும் :** நந்தனார் வாழிய; வாழிய நந்தனார்.

**நந்தனார் :** முந்திய முதல் நடு இறுதியும் ஆயினன்
அற்புதம் காட்டினன். அவனை வணங்குமின்.
( இசை )
திருப்புன்கூர்ச் சிவலோகன் செய்ய மலர் அடி போற்றி.

**பலரும் :** போற்றி, போற்றி.

**நந்தனார் :** கருத்தையெல்லாம் கடந்தொளிரும் கடவுள் திருவடி போற்றி.

**பலரும் :** போற்றி, போற்றி.

**நந்தனார் :** சிரத்தையுடன் பணிவோரின் திருப்புகலே, துணை போற்றி.

**பலரும் :** போற்றி, போற்றி.

**நந்தனார் :** வருத்தமெலாம் ஒழித்தருளி வாழவைக்கும் சிவம் போற்றி.

**பலரும் :** போற்றி, போற்றி.

**நந்தனார் :** ( அனைவரையும் நோக்கிப் பேசுகிறார். )
தொண்டர்களே! தோழர்களே, கேண்மின். எமது புன்கூர்
அண்டர் பெருமான் அமரும் தளிக்கருகில்
பள்ளம் ஒன்றுண்டல்லவோ பாருங்கள்; ஆங்கதனை
நல்ல குளமாக நாங்கள் புதுக்கிடலாம்.
வாருங்கள் எல்லாரும். தாருங்கள் நும் பணியை.

**பலரும் :** அவ்விதமே செய்வோம். அடியார் பெருந்தகையே.

**சாமிநாதன் :** தெய்வ நலம் சார் திருப்பணியில் ஈடுபட எங்களுக்கு வாய்த்த இனிய தருணம் இது. பொன் குளத்தைக் காண்போம். புறப்படுங்கள் எல்லாரும்.

**குமாரநாதன் :** நந்தனார் வாழ்க. நடவுங்கள் தொண்டு செய்ய.

**நந்தனார் :** [ பரவசமாக ]
சிந்தை மேல் வந்தான் சிவன்.

[ எல்லாரும் வெளியேறுகின்றனர். திரை விழுகிறது. ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் அங்கம் — முதலாம் காட்சி

சூத்திரதாரன் : கோபுரவாசலால் உட்செலா நந்தனர்
தொண்டுகள் செய்தார். தொடர்ந்தார் தம்பணி
புன்கூர் விட்டுப் போயினர் சொந்த ஊர்.
அயலூர் மக்களால் அறியப் பட்டவர்
சொந்த ஊரிலே, சுற்றத்திடையிலே
அறியப்படாமல் அவதிப்படுகிறார்.
தாயும், தங்கையும், மாமனும், ஆண்டையும்
மற்றையோர்களும் அவர் யார் என்பதைச்
சற்றும் விளங்கிடாத் தன்மையர் ஆயினர்.
வழமை விரோதமாய் எதிலும்
முனைவோர் கதி இது; முயல்வோர் கதி இதே !

[ திரை விலகுகிறது. ஆதனூர். மேடையின் முன்புறமாக, வலது மூலையில் நந்தனரின் குடிசை உள்ளது. புகைபிடித்துப் பழையதாகி விட்ட கூரையிலே சுரைக்கொடி படர்ந்திருக்கிறது. தட்டிகள் பழுது பட்டவை. குடிசைக்கு வெளியில் மட்டுமே நாடக நிகழ்ச்சிகள் நடைபெறப் போகின்றனவாதலால், அது அரைகுறையாகத் தெரிந்தாலும் போதும். குடிசைக்குப் பின்னாலே பரந்த வெளி உண்டு. தூரத்திலே வயல்வெளிகள் உள்ள அடையாளங்களையும் சைக்கிளோராமாவினாற் காட்டலாம். மேடையின் இடப்பக்கமாகத் தொலைவிலே ஒரு தனி மரம் காணப்படுகிறது. இம்மரத்தடியிலே தான் ஆதனூர்க் கோயிலில், பொங்கல் பூசைகள் நடைபெறுவது வழக்கம். இன்று மாலை பொங்கல் நடைபெறவிருப்பதால், அதற்கான ஆயத்தங்கள் அந்த மரத்தடியிலே சிறிது சிறிதாக நடந்து கொண்டிருக்கின்றன. ஊர் மக்கள் சிலர் வந்து அந்த மரத்தடியிலே ஒரு சிறு பந்தல் போட்டு, வெள்ளை கட்டி, தோரணம் தூக்கி அழகு படுத்துகிறார்கள். பசுமையான பூங்கிளைகள் கொண்டும், சிவந்த மலர்கள் கொண்டும் அவர்கள் பூசை, பலி, பொங்கலுக்கான தயாரிப்புகளைச் செய்கின்றனர். காட்சி தொடங்கும் போது நந்தனரின் தங்கையாகிய வள்ளி குடிசையருகிலே அரிசி புடைத்துக்கொண்டிருக்கிறாள். தாய் முத்து குடிசைக்குள்ளிருந்து வெளியாலே வருகிறாள். ]

முத்து : நந்தன் எங்கே போனான் ? காணோம் !

வள்ளி : எங்கே போனார் ? இல்லையா உள்ளே ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து : உள்ளே இருந்தால் உன்னை ஏன் கேட்கிறேன்?
பின்புறம் போய்ப்பார். கல்லுக் கும்பியில்
கனவு கண்டு கொண்டும் இருப்பான்.

வள்ளி : அம்மா ! போன கிழமை அண்ணர்
புன்கூர் சென்று திரும்பினுர் அல்லவா ?
அன்று தொடங்கிய ஆலயப் பித்தம்
இன்னும் இறங்கும் அறிகுறி காணும்.
நாளையே போவேன் என்று சொல்கிருர்.

முத்து : நாளையே போவதா ? நந்தனு ? எங்கே ?

வள்ளி: தில்லை செல்லல் வேண்டுமாம்.

முத்து : தில்லையா ?
புலையர் நாங்கள்; பூசுரர் வணங்கும்
தெய்வ நிலையம் செல்வதா ? தப்பு.

வள்ளி: அம்மா ! நீ எம் அண்ணரைப்பற்றி
என்னதான் உனக்குள் எண்ணி இருக்கிருய் ?
திருப்புன்கூரார் அனுப்பிய செய்தியை
இன்னுமா நம்ப மறுக்கிருய்?

முத்து : இவன் என்
மைந்தன். அறிவாய், மகளே ! நந்தன்
நானே பெற்ற சிறு மகன். நாலும்
நாலும் எட்டென்று நல்லாய் விளங்கப்
பத்து மாதம் படிப்பித்தேன், நான்.
மூக்கைப் பிடித்தால், வாயை 'ஆ' என்று
திறக்கக் கூடத் தெரியாச் சிறுவன்.
அப்படிப் பட்டவன் ஆலயம் சென்முன்,
கடவுள் மகிழ்ந்தார்; காட்சி கொடுத்தார்,
நந்தியந் தேவரை நகரச் சொல்லி
அப்பால் அசைத்தார்; அருளை வழங்கினுர்
என்ற பொய்க்கதையை எப்படி நம்புவேன் ?

வள்ளி: அப்படியாஞல் அண்ணரோடு
யாத்திரை சென்று திரும்பிய அம்மான்
மூத்ததம்பி சொன்னது முழுவதும்
பொய்யா அம்மா ?

முத்து : போ, போ ! நீயும்
ஊர்ப்புளுகுகளை நம்பி ஏன் உழல்கிருய் ?

வள்ளி: கோயிலில் இருக்கும் சாமிகள் பொய்யா?

முத்து : பொய் என்று நான் சொன்னேன்? இல்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் ஓதி, வெண்ணூல் பூண்டு,
தீது நன்மை தெரிந்தவரான
மெய்த்தவ ஞானியர் வெளிப்படக் காண்பார்,
சாமியை நேரிலே! சாமானியர், நாம்.

[மூத்ததம்பி என்ற முதியவர் வருகிறார்.]

**வள்ளி:** அம்மா! அங்கே மூத்ததம்பி
அம்மான் வருகிறார்; அவரையே கேட்போம்.
மெய்யே, அம்மான்? பொய்யா அன்று
நந்தி நகர்ந்து நடுவழி விட்டது?

**மூத்தார்:** என்ன தங்கைச்சி? எத்தனை தடவை நான்
முன்னம் இதையே முறைப்படி விபரமாய்
உனக்குச் சொல்லி இருக்கிறேன்? பிறகும்
ஏனம்மா நீ இப்படிக் கேட்கிறாய்?

**வள்ளி:** அம்மா ஏனோ ஐயப்படுகிறாள்.

**மூத்தார்:** ஊரெலாம் கூடி உன் மகன் மகானே,
பரம்பரன் அருளின் பாத்திரமானவன்,
வரம்பிலா அன்பினன், மகிமைகள் வாய்ந்தவன்,
தூயன், நேயன், துன்பியல் வாழ்க்கையின்
தீமையை வென்று தீர்த்து விட்டவன்
என்று கூறினர். இவனைப் பெற்ற நீ
உன்மகன் பெருமையை உளங்கொள மறுக்கிறாய்.
என்னடி முத்தூ! இது உனக்கு அழகா?

**முத்து:** திருப்புன்கூரார் சொல்லலாம் அப்படி.
ஆனால், இந்த ஆதனூராரோ
நந்தனைப் பார்த்து நளினம் செய்கிறார்.
பொங்கல் பூசையின் பொருட்டாய், இன்றோ
அனைவரும் கூடி ஆயத்தங்கள்
செய்கிறார். ஆனால் இவனோ, சிறிதும்
அவைகளைப் பற்றி அக்கறை இல்லான்.

**வள்ளி:** அம்மா! அம்மா!! அமுதம் குடித்தவர்
அப்புறம் கள்ளில் ஆசைப் படுவரோ?

**முத்து:** எப்படியோ அவன் கெட்டே போனான்.
ஊருடன் பகைக்கின், வேருடன் கெடும் என
முந்தையோர் சொன்ன முதுமொழி
பொய்க்குமா?

**நந்தனார்:** [முரசம் ஒன்றைக் கட்டியவாறே வருகிறார்.]
அம்மா! இதோ பார் அழகிய முரசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து : வேந்தனுர் துணைவர் வேண்டியபடியே
கட்டி முடிந்ததா முரசம்? நல்லது.
இப்படியாய் நீ எங்கள் தொழிலால்
பொருள் பணம் சேர்த்தாற் புகழும் சேரும்.
எனக்கும் பேரப்பிள்ளைகள் கிடைத்தால்........
எத்தனை நல்ல இனிய பேறது?

[நந்தனுர் ஏதோ யோசித்துக்கொண்டு பேசாமல் நிற்கிருர். [

முத்து : என்ன தம்பி!

நந்தனுர் : இல்லை, என் தாயே!
இந்த முரசம் ஈசர்க்கு உரியது.
துணைவேந்தர் தாம் சொல்லி அனுப்பிய
படியால் அல்ல நான் முரசம் செய்தது.
சிதம்பர நடம்பயில் செழுங்கழல் புனைந்தவன்
உரிமையாயாம் அந்த வீணை, இம் முரசம்.

[குடிசைக்குள் இருக்கும் ஒரு வீணையைச் சுட்டிக் காட்டுகிருர்.]

அம்மா! நாளை சிதம்பரம் போகிறேன்.
நடேசனுரிடம் நாளையே போகிறேன்.
தடை பேசாதே, தாயே! தில்லையில்
ஆடவல்லானின் அமுத நாடகம்
காணவேண்டும்; நான் நாளையே போகிறேன்.

முத்து : என்னடா தம்பி! சன்னதம் வந்தவன்
போல என்ன புலம்பல்? சீ, விடு.

நந்தனுர் : மன்றில் நடித்திடும் வானவர் கோனை
என்று நான் காண்பெனே? என்று நான்
காண்பெனே?
நாளையே போவேன் நடேசனைப் பார்க்க
அம்மா!

முத்து : தம்பி! ஆறுதல் கொள்ளடா,
இராத்திரி முழுவதும் தூக்கமே இல்லை.
முரசம் கட்டலில் முழுகிப் போனுய்.
ஓய்வில்லாமல் உழைத்தால், உழன்ருல்,
பாட்டும், கூத்தும், பல விளையாடலும்
இல்லாதவனுய் இருக்க முயன்ருல்,
எதையோ நினைத்தே எண்ணக் கடலிலே
முழுகி, முழுகி முழு நேரத்தையும்
யோசனை செய்வதில் ஒடுக்கி நலிந்தால்,
புத்தி பிசகி விடாதா, பின்னே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தார் : முத்து, நீ அடாத வார்த்தைகள் பேசினாய். பித்தனா நந்தன்? பேய்க்கதை! அவன் ஒரு முத்தனாம் என்பதை முன்னமே சொன்னேன்.

முத்து : [ மூத்தார் சொன்னதைச் செவி மடுக்காமல், வள்ளியை நோக்கி ]

வள்ளி! உன் அண்ணனை வழி நடத்திப் போ.
நள்ளிரா வரையும் இம்மியும் உறக்கமே
இல்லாதவனாய் ஏனோ தவித்தான்.
வீட்டிலே கொண்டுபோய்ப் படுக்கையிற்
படுக்க வை.
அடுப்பில் வெந்நீர் கொதிக்கவைத்திருக்கிறேன்.
கஞ்சி வைத்துக் கொஞ்சம் கொடு, நான்
பொங்கலுக்கான ஆயத்தங்கள்
செய்த பிறகு வந்து பார்க்கிறேன்.

[ நந்தனாரைக் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டு வள்ளி குடிசைக்குட் போகிறாள். ]

மூத்தார் : முத்து,
நீ எதற்கம்மா அச்சம் கொள்கிறாய்?
சீ, விடு கவலை. சிவனே என்று இரு.

முத்து ; அண்ணா, நீங்களும் அவன் வழிப்பட்டீர்.
எண்ணவே எனக்கோ இதயம் வலிக்கும்.
அந்தணாளர்கள் ஆசையோடு அழுத்திச்
சமக்கிருதத்திலே மந்திரம் ஓதி,
சுலோகம் சொல்லித் தூபம் காட்டி
அருச்சனை செய்யும் அந்தத் தேவுகள்
நம்மைப் போலே புலையர் வணங்க
ஏற்றவை அல்ல என்று நினைக்கிறேன்
சாத்தனாரும் வருகிறார். சரி, நாம்
இவைகளைப்பற்றி அவரையே கேட்போம்.

சாத்தனார் : [ வாட்டசாட்டமான முரடர். ஊர்க்கோயிற் பூசாரியார். ஒரு பெரிய கத்தியுடன் வந்தவர், கத்தியைப் பக்கத்தில் உள்ள ஒரு முருக்கமரத்திலே சொண்டு புதையுமாறு கொத்திவிட்டு, முத்துவுடனும், மூத்ததம்பியுடனும் பேசுகிறார்.]

என்ன மூத்தார், எப்படிச் சுகங்கள்?
இந்த வாட்டி எத்தனை ஆடுகள்
நேர்ந்துவிட்டிருக்கிறீர் நீர்? ஏன், முத்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிகள் எத்தனை, ஆடுகள் எத்தனை
உங்கள் கணக்கிலே உள்ளன இம்முறை?

முத்து : சாத்தனார் அண்ணா! தரித்திரர், நாங்கள். வசதிகள் அறியோம். வறுமையோ மிகவும் வாட்டி எம்மை வருத்தி விட்டது.
நாங்கள் இம்முறை நாலு ஆடுகள் தான் பலி கொடுக்கிறதாய்ப் பெயர் குறித்திருக்கிறோம்.

சாத்தனார் : மூத்தார், நீங்கள்?

மூத்தார் : ஒன்றுமே இல்லை.

சாத்தனார் : என்ன புதுமை!

மூத்தார் : எங்கள் நந்தர்
சொல்லியபடியே தொடர்ந்து ஒழுகுவதாய்
நமது குறிச்சியார் ஒப்புக்கொண்டுளார்.

முத்து : என்ன சொல்கிறான் என் மகன் நந்தன்?

மூத்தார் : பலியே வேண்டாம் என்கிறார், நந்தர்.

சாத்தனார் : குலவழி வழமையைக் குலைக்கவா நினைத்தான்?

மூத்தார் : சிவபரம்பொருளின் திருந்திய சேவடி
உவகையாய் நினைந்தே உள்ளம் உருகுவோர்
பிற சிறு தெய்வம் பேணுதல் பிழை என
உறுதியாக ஓதினார் நந்தனார்.

சாத்தனார் : சிறு தெய்வம் என எவரை நீ கூறினாய்?
அறிவிலி, கெடுவாய்! அடக்கடா நாவை.
வீரன், இருளன், காட்டேரி,
வெறியன், நொண்டி, சாமுண்டி,
தூறித்தூண்டி நல்லண்ணன்,
தொட்டிச் சின்னான், பெத்தண்ணன்,
மாறி முனியன், சங்கிலியன்,
மாடன் கறுப்பன் முதலான
சாமிகளையா தகாத சொற்களால்
இகழத் துணிந்தாய்? இழிந்தவா, ஈனனே!

முத்து : என் மகன் நந்தனா இகழ்கிறான் சாமியை?

மூத்தார் : இதுக்காய்க் கொஞ்சமும் இரங்காதே நீ
முத்து, நீ பெற்ற புத்திரன் பெரியவன்.

சாத்தனார் : [ சீற்றம் கொண்டு ]
எங்கள் சாமிகள் இழிந்தவர், சிறியவர்.
உங்கள் நந்தன் உயர்ந்தவன் என்கிறீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்த மூடத் துன்மதி படைத்த
எத்தர் ஆயினர் எல்லா மாந்தரும்.

[ விறுக்கென்று போக வெளிக்கிடுகிருர், சாத்தனுர். ]

மூத்தார் : கத்தியை மறதியில் விட்டுப் போகிறீர்,
புத்தியில் உயர்ந்த பூசாரியாரே !

சாத்தனுர் : [ சீற்றம் தணியாமல் ]
தாரும் எடுத்து; தகுதியில் நிறைந்த
மேதையார் நீவீர்.

[ மூத்தார் கொடுப்புக்குட் சிரித்தபடி கத்தியை எடுத்துக் கொடுக்கிருர். ]

சாத்தனுர் : [ கத்தியை வாங்கிக் கொண்டு, அழுத்தலாக ]
மிகவும் நன்றி.

[ சாத்தனுர் கோயிற்பக்கமாகச் சென்று மறைகிருர் ]

முத்து : சாத்தனுர் பெரிய சண்டியர்; சண்டையர்.
அவரைப் பகைப்பதே ஆபத்தானது.
நந்தன் ஏன் இப்படிப் புந்தி கலங்கினுன் ?
முந்தையோர் முறையுடன் மோத
ஏன் முந்தினுன் ?
ஊரார் பகைத்தால் உறவு ஆர் ? பிறகு ஆர் ?

மூத்தார் : தங்காய் ! கவலை சரி அல்ல அடீ !
கங்காதரனின் கழல் சூடியவன்
மங்கா ஒளியன்; மனிதர் தலைவன்.
இங்கார் அவன் மேன்மை எதிர்த்திடுவார் ?

முத்து : ஏதோ நீங்கள் எனக்கு ஆறுதலாய்த்
தோதாய்ப் பலவும் சொல்கிறீர்கள்.
[ தெய்வங்களை நினைத்து ]
சாமி ! நாமோ சாதியாற் புலையர்.
தீமை வராமற் காத்தருள் செய்க.

[ பகலொளி மங்கி இருட்டுகிறது. கடகங்களில் அரிசி, பொங்கற் பானை, பாற் செம்பு, விறகு கட்டு, ஆடு, கோழி முதலியவற் றுடன் பலர் வருகிருர்கள். சிவந்த ஒளி படருகிறது. ஆங்காங்கே தீப்பந்தங்கள், சாம்பிராணிப் புகை முதலானவை கொண்டு, பொங்கல் பூசைக்கான சூழலும் சுவாத்தியமும் காட்டப்படல் வேண்டும். இதன் பொருட்டு, முரசங்கள், தாரை, தப்பட்டை, சங்கு, பிற இசைக்கருவிகள் என்பவற்றை எற்றவாறு கையாண்டு இசை அமைத்துக் கொள்ளலாம். பொங்கலுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தங்களில் ஈடுபட்டிருக்கையிலே பல்வேறு குரல்கள் பின்வருவன போன்ற பேச்சுகளைப் பேசலாம். பேசுவது யார் என்று குறிக்காத இடங்களில், பொங்க வந்தவர்களில் யாரோ ஒருவர் பேசுகிறார் என்று கொள்ளுதல் வேண்டும்.]

— குங்குமம் எங்கே? கொண்டு வா.
— இந்தா.
— வாழைக் குற்றியை வகிர்ந்துவிட்டாயா?
— வகிரவா, குடையவா, வயிரவா?
— குடை, குடை.
— தேங்காய்ப் பாதி........
— சீலையை அதற்குள்
திணித்தது சரியா?
— தீயை மூட்டடா.
— அருமையான விளக்குகள், ஆகா!
— பூமாலைகளைப் போடும். ஆடுகள்
கத்துகின்றனவே! கத்தியை வீசினால்
கதறுதல் எல்லாம் சிதறுதல் அடையும்.
— பாவம், ஆடுகள்!
— பாவமா?
— என்னது?
— பாவம் புண்ணியம் பார்ப்பார் பார்ப்பார்.
— முழக்கச் சொல்லடா முத்தையாவிடம்.
வளர்ந்துகள் சரிந்தன வாரும், வாரும்.
— மடைகளைப் பரவும்.
— வல்லி!
— சின்னவன்!!
— ஊதுவத்தி உண்டா, உன்னிடம்?
— வாழைப் பழத்திலே குத்தி வை வடிவாய்.
— சாத்தனார் எங்கே?
— சாத்தனார், சாத்தனார்!
— கற்பூரத்தைக் கொளுத்தி விட்டாரே.
— அரோகரா, அரோகரா. சாமீ, அரோகரா
— ஆடுவோம் பாடுவோம் அனைவரும் பாடுவோம்.

[பாடி ஆடுகிறார்கள். பின்வரும் பாடலை ஏதுமொரு நாடோடி மெட்டில் அமைக்கலாம்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரும் : [ பாட்டு ]

எல்லைப் பிடாரியே எங்கள் முன் வந்திந்தக்
கொல்லை உன் கோயிலாய்க் கொள்ளடி
நல்ல புதுக்கள்ளு நம்பி உன் முன் வைத்தோம்
நாயகியே அருள் நல்கடி.

முண்டாசு கட்டிய நொண்டி வீரப்பரே
கொண்டாடினோம். பலி கொள்ளுவீர்.
தொண்டாக நாங்கள் தொழுது வணங்கினோம்.
துன்பங்கள் தீர்த்தருள் நல்குவீர்.

கச்சை அரிவாட் கறுப்பண்ண சாமியே
இச்சையுடன் உன்னைப் பூசித்தோம்.
பச்சை இறைச்சி படைத்து வணங்கினோம்
பார்த்தருள் எங்களைக் காத்தருள்.

கோழியும் சேவலும் ஆடும் பலியிட்டுக்
கும்பிட்டு நின்று பணிகிறோம்.
கீழ்மைகள் யாவும் கிழிய அருள் செய்து
வாழ்வில் நலம் பல பெய்குவீர்.

பித்துப் பிடித்துள்ள பேயனும் நந்தனின்
சித்தம் தெளிய அருளுவீர்.
நித்தம் பழைய நெறிமுறை பற்றியே
நின்றொழுகும் நிலை நல்குவீர்.

**[ இதற்குள் நந்தனும் முத்துவும் வந்து நிற்கிறார்கள், ஒரு பக்கத்திலே ]**

**சாத்தனார் :** [ சாமியாடி வாக்குச் சொல்கிறார் ]

நந்தா ! இனி உன் சிந்தையிற் படிந்த
மயக்கம் முழுவதும் மாயமாய் மறையும்.
அந்தணர், வேதியர், அருமறையாளர்
வந்தனை செய்ய வாய்த்த தேவர் உன்
நெஞ்சில் நுழைந்து நிகழ்த்தினர், கலவரம்.
அஞ்சுதல் ஒழிவாய், அப்பனே ! உனது
பிழைகள் யாவும் பொறுக்கப்பட்டன
வழுவிலாய் என்று நீ மதிக்கப்படுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பன் சாமி நான். கருணை மொழி இதன்
சிறப்பினை உணர்ந்து திருந்துக நல்லாய்.
பலி கொடுக்கும் நம் பழைய மரபிலே
பழுதுண்டென்று பழித்திடல் வேண்டாம்.
கள்ளுப் படைப்பதைக் கறுப்பன் நான் மிகவும்
உள்ளக் களிப்பொடும், உவப்பொடும்
விரும்புவேன்.
ஆதலால் அந்த அரிய வழக்கம்
தீதென மொழிந்து திரிவது தவிர்க.
வேண்டாம் அந்த வேதியர் தேவுகள்.
தீண்டாச் சாதியார் தெய்வங்களையே
போற்றக் கடவாய். புரிந்ததா? இதோ, பார்.

முத்து : தம்பி, நந்தன்! சாமி சொன்னவை
கவனமாய்க் கேளடா, கடவுளே! உனக்குப்
பித்தம் தெளிய மருந்திது. கேளடா!!

நந்தனார் : அம்மா! அடியேன் அம்பலக் கூத்தனின்
நன்னாமங்கள் தவிர்ந்த, பிறரது
புன்மை மொழிகளும் போற்றிக் கேட்பெனோ?
ஒருவனே முதல்வன். உள்ளவன் அவனே.
விரிவிலா அறிவினோர் வேறு பல் மதங்களைச்
செய்வார்; உயரிய சிவமதம் மறுப்பார்.
கோழிகள் அறுப்பார், கோயிலில்! மடையர்!
அன்பே சிவம் என அறியாப் பதர்கள்.

சொறியன் : யாரை நீ பதர் என ஏசினாய் மடையனே?

ஒருவன் : அடியடா நந்தனை.

சொறியன் : ஆளைப்பிடித்து
மரத்துடன் கட்டு; மாட்டை அடிப்பது
போல இவன்மேற் பொழிந்து தள்ளலாம்.

நந்தனார் : என்னைத் தொடாதீர்.

சொறியன் : ஏ, படு பாவி!
உன்னை வெளுப்போம். ஒடித்து நொறுக்குவோம்.
கடையவா! எங்கள் கடவுளர் யாரையும்
இகழ்ந்தா பேசினாய்?

நந்தனார் : ஈசனே!

முத்து : நந்தா!

நந்தனார் : சண்டை ஏன் நண்பரே! தயவு செய்து நான்
கூறும் சொற்களைக் குறித்துக் கேட்பீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிறப்புடைய பெற்றியர் நாமெலாம்.
இறந்து பிறப்போம், பிறந்தால் இறப்போம்.
சில்நாட் பல்பிணிச் சிற்றறிவு உடையோம்.
எல்லைப்பட்ட அறிவினேம் என்பதால்,
தொல்லைகள் பலப்பல சூழ உலைகிறேம்.
ஆசைகள் அலைக்க அல்லற் படுகிறேம்.
பொருமைப் பட்டுப் புல்லராய்த் திரிகிறேம்.
சீற்றம் கொண்டு சிறுசெயல் செய்கிறேம்.
மற்றவர் உடலையும் மனத்தையும் வருத்தும்
குற்றங்கள் — பல கொடுமைகள் — புரிகிறேம்.
இவைகள் எல்லாம் தீயன அல்லவா ?

**ஒருவன் :** அடியடா நந்தனை !

**மற்றெருவன் :** ஆளை விடு. நில்
என்ன தான் சொல்கிருன் என்பதைக் கேட்போம்.

**மூத்தார் :** கேட்ட பின்னர் ஏற்ற தீர்ப்பைத்
தருவதே நல்லது.

**ஒருவன் :** சரி, சரி

**நந்தனர் :** தோழரே !
சீற்றந் தணிவீர் சிறிது. நான் இனிச்
சாற்றும் யாவையும் சற்றே கேட்பீர்.
எல்லைப் பிடாரி, கறுப்பன், வீரன்,
சங்கிலி என்ற சாமிகள் எல்லாம்
இறந்த நம் முன்னையோர். இவர்கள் மனிதரே !
வாழ்ந்த போதில் மற்றையோர் புரியா
அரிய செயல்பல ஆற்றினர்; ஆகையால்,
அவர்களை நாங்கள் பணிகிறேம்; தொழுகிறேம்.
அல்வளவே தான்; அன்றி அவர்கள்
தெய்விகர் என்று செப்புதல் தப்பு.

**ஒருவன் :** அப்படியானல் நாங்கள் எல்லாம்
கூடி ஒருங்கே கும்பிட வந்ததும்
மூடத்தனமோ ? மூடத்தனமோ ?

**மற்றெருவன் :** மூஞ்சியில் மொத்தடா.

**சொறியன் :** மோடன் நந்தன்.

**நந்தனர் :** இல்லை என் தோழரே ! எதுக்கு நீர் ஆத்திரம்
கொள்கிறீர் ? சிறிது குளிர்மை கொள்ளுவீர்.
மூடர் நீர் என்று நான் மொழியத் துணிவெனே ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடு மிக்குடைய பெரிய அறிவினீர்.
ஆதலால், சீற்றம் அடக்கி இருந்தே
புத்தியால் எதையும் புகுந்து நோக்கினல்
வித்தியாசங்கள், வேறுபாடுகள்
யாவும் உமக்குப் புலப்படும் என்கிறேன்.

மற்றொருவன் : பேச விடுக. பெரியவன் நந்தன்.

ஒருவன் : பெரியனே, சிறியனே — பேச்சிலே வல்லவன்.

மற்றொருவன் : என்னதான் சொல்கிறன் என்பதைக் கேட்போம்.

நந்தனர் : முன்னர் நான் சொல்லியபடியே நாமெலாம்
பிறப்பிறப்புடையோம். பெரியவன் ஒருவனே.
அவனே இறைவன் ஆதி முதல்வன்.
பிறவா யாக்கைப் பெரியோன் என்றும்
பழைய நூல்களிற் பாட்டுகள் உண்டு.

ஒருவன் : பாட்டு நூல் எமக்கு ஏன்? பறையர் நாங்கள்.

நந்தனர் : நாட்டிலே இப்படி நாங்களே எங்களைத்
தாழ்த்தித் தாழ்த்தி ஒடுங்கி இறங்கினல்,
எப்படி அப்பனே, நற்பதம் கிட்டும்?
உழவுத் தொழிலுக்கு உரிமை பூண்ட நாம்
தொழுது நம் ஆண்டவர் தொண்டுகள்
முறைப்படி
செய்திடும் கடமை உடையோம். அன்றி எம்
அறிவைத் தீட்டும் அந்த உரிமையும்
இல்லாதார் என எவர் தான் கூறலாம்?
பாட்டு நூல் படிப்பதாற் பலன் உண்டாயின்
பாட்டு நூல் தேடிப் பல முறை படிப்போம்.
கல்வி அறிவாற் கடையவர் கூட
நல்ல நிலைமையை நண்ணுதல் கூடும்.
ஆகையினல் நாம் அறிவினைத் தேடுவோம்.
அறிவினைத் தேடினல் இறைவனைத் தேடலாம்.
இறைவனைத் தேடினல் இன்பம் கிடைக்கும்.

ஒருவன் : ஆளை அடக்க ஆண்டை தான் இனிச் சரி.

சாத்தனர் : வெறி பிடித்தவன்போல் வீறுகொண்டிருக்கிறன்.
அறிவு பெற்றவன் போல் அளக்கிறன்........

மற்றொருவன் : சீ, சீ!
நல்லவை தானே நமக்கு நந்தனர்
சொல்லினர்? அவற்றின் சுத்தமும் தூய்மையும்
உணராமல் நாம் உறுமுதல் பிழை தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொறியன் : நீ அவன் கட்சி. நிறுத்தடா பிதற்றலை.

ஒரு முதியவர் : இந்தக் காலப் பிள்ளைகள் எதையோ
கேட்டு நடப்பரோ? கேவலமான
மோட்டுத்தனங்களில் முனைந்து நிற்பார்கள்.
அந்தக் காலம்! அடடா, மிகவும்
ஒழுக்கம் நிறைந்த உயரிய காலம்.
பழக்க வழக்கம் பழுதில்லாமல்
ஓம்பப்பட்ட உத்தம காலம்.
கலியின் கொடுமை முற்றவும், பலவாம்
நலிவுகள், பிளவுகள், அலைவுகள், கலைவுகள்
வந்தன. உலகே நைந்தது. யாவுமே
கெட்டுக் குட்டிச் சுவராய் விட்டன.
எதற்கெடுத்தாலும் 'ஏன்?' எனக் கேட்கும்
கிளர்ச்சிப் போக்கு மிகுத்து விட்டது.

சாத்தனுர் : ஆண்டையிடம் நாம் அவைகளைப் பற்றி
நாளைக் காலையே முறைப்படல் வேண்டும்.
கலகக் காரரின் கயமையை நிறுத்தி
உலகைக் காப்பதே உயர்ந்தோர் கடமையாம்.
வேண்டிய கருமம் ஆண்டையே செய்வார்.

நந்தனுர் : ஆண்டை என்ருல் அஞ்சுவோம் அல்லோம்.

சொறியன் : அஞ்சுவோம் அல்லமா?

[அங்குள்ளவர்களில் ஐந்தாறு பேர் திரண்டு கூடிச் சென்று நந்தனுர் பக்கலிலே நின்று கொள்கின்றனர்.]

நந்தனுர் பக்கத்தவன் ஒருவன் :
ஆமாம்.

மூத்தார் : ஆமாம்!

சாத்தனுர் : மிஞ்சி நீர் உங்கள் மிகுதிப்பாட்டினுல்
அடிபடப் போகிறீர். அடிமைகள் நாமெலாம்.

நந்தனுர் : அடிமை தான். ஆனுல், ஆண்டைக்கல்ல
கொடியிலே இடபம் கொண்டவனுக்கு.

சாத்தனுர் : கலகக் காரர் உம் கட்சியைச் சேர்ந்தவர்.
அலகைப் பேய்கள் நீர்.

ஒருவன் : அடியடா நந்தனை.

மற்றொருவன் : பிடித்துக் கட்டு. பிய்ப்போம் அவனை.

[சொறியன் உட்பட ஒரு சிலர் நந்தனை நையப் புடைத்து விடுகிருர்கள்.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் : வெளு — கொடு.

சொறியன் : வேண்டாம்.

மற்ருெருவன் : வீரிட்டலறினுல்
எங்களுக்கென்ன ? இன்னும் வளமாய்
நாலு குத்துக் குத்தடா, வேலு !

முத்து : ஐயோ, நந்தா !

நந்தனுர் : அம்மா........

சாத்தனுர் : ஆண்டையை
எதிர்க்கத் துணிந்தால் இன்னும் வாங்குவாய்.

ஒருவன் : ஏனடா, நந்தன் எழும்பவே இல்லையா ?

மற்ருெருவன் : செத்தும் இருப்பான்.

சொறியன் : சிவனே, சிவனே !

ஒருவன் : கத்தாதே நீ. கழலுவோம் மெல்லவாய்.

சொறியன் : கிட்ட நாம் நின்ருல், கிழவி நாங்களே
கொன்ரேும் என்று கூறவும் துணிவாள்

ஒருவன் : நன்றே சொன்ணுய். நட, நட, சொறியா !

[ கலவர அரவங்களைக் கேட்டுக் குடிசையில் இருந்த வள்ளி ஓடி வருகிருள். புலம்புகிருள். ]

வள்ளி : அண்ணு ! அண்ணு !! அடித்து விட்டார்களே....
கழுதைகள் முன்னர் ஏன் கற்பனை நயத்தொடும்
கற்பூரத்தின் பெருமையைச் செப்பினுய் ?
அறிவிலா மூர்க்கர் அடித்து விட்டார்களே........
அம்மா, அம்மா ! அண்ணரைத் தடுத்து
வீட்டுக்கு உடனே கூட்டி வராமல்
சும்மா இருந்ததேன் ? சொல்லுவாய், அம்மா.

முத்து : வள்ளீ.........

நந்தனுர் : ( முனகி, முனகி )
தங்கையே ! வருத்தப்படாதே.

மூத்தார் : நாங்கள், உன் அண்ணரை நையப் புடைத்த
தீங்கினர் யாரையும் தீர்த்துக் கட்டுவோம்.
அவர்களை முடிக்காது ஆறுதல் அடையோம்.
கெட்ட மூதேவிகள் — கீழோர்........

வள்ளி : மாமா !
அவர்களைத் திட்டி ஆம் பயன் என்ன ?
அண்ணரைத் தூக்கி, அப்புறப்படுத்தி
வீடு சேர்க்க வேண்டிய உதவியைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து தாருங்கள்.

முத்து : சிவனே, சிவனே !
ஊருடன் பகைத்தான். உலகோர் இனிமேல்
எங்களை ஒதுக்கி வைக்கவும் எண்ணுவார்.
ஆண்டையை எதிர்ப்பது போலவும் பேசினான்.
கேட்டதும் என்ன கெடுதி சூழ்வரோ ?
ஐயோ, என் விதி........

வள்ளி : அம்மா, அம்மா ! !
நள்ளிராப் போதில், நடுக்கும் குளிரிலே
பிதற்றிப் பிதற்றி ஏன் பிலாக்கணம் வைக்கிறாய் ?

[ முத்தாரும் பிறருமாக நந்தனாரைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு குடிசைக்குட் செல்லப் புறப்படுகின்றனர். ]

முத்து : இன்னும் எங்களுக்கு எத்தனை கெடுதிகள்
வரவுள்ளனவோ ?

வள்ளி : வா, வா அம்மா !
தில்லை நடேசனின் திருவடி உண்டு.
நடப்பவை யாவுமே நடேசனின் கூத்து.

[ எல்லாரும் போகிறார்கள். ]

## இரண்டாம் அங்கம் — இரண்டாம் காட்சி

[ நந்தனாருக்கு ஆண்டையாராயுள்ள வேதியரின் வீட்டு முற்றம். திண்ணையிலே வேதியர் வீற்றிருக்க, சென்ற இரவு சிற்றூர்க் கோயிலிலே கலகத்துக்குக் காரணமாயிருந்த சொறியன் முதலானோரும், சாத்தனாரும் வருகின்றனர். வந்து, குழைந்து பணிந்து நின்று...... ]

சொறியன் : ஐயே ! ஐயே !! அடியோம் வணக்கம்.
இராத்திரி நடந்த ஈன நிகழ்ச்சிகள்
எப்படி ஐயே சொல்லுவோம் ? ஈசனே !

வேதியர் : என்னடா, சொறியா ? ஏன் நீர் இப்படித்
தடுமாறுகிறீர் ? தவிக்கிறீர் ? நேற்றுக்
கறுப்பன் கோயிலிற் சிறப்பொடு பூசனை
பொங்கல் பலிகள் போட்டிருப்பீரே !
அந்த மகிழ்ச்சியில் ஆழ்ந்து போய், நீங்கள்
உலகை மறந்தே உலாவுவீர் என்று தான்
எண்ணி இருந்தேன். என்னடா, நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பிய மனத்துடன் தளம்பியபடியே
உளம் பதறுகிறீர்? உள்ளதைச் சொல்லடா.

சொறியன் : பெரிய கலவரம் கோயிலில், இராத்திரி.

வேதியர் : கலகமா? அதற்குக் காரணம் என்ன?

சொறியன் : நந்தன் குழப்பினுன்.

வேதியர் : நல்லவன் அல்லவா?

சொறியன் : முன்னைய குணங்கள் முற்றிலும் மாறினுன்.
கோயிலில் வந்து குழப்பம் செய்தான்.

வேதியர் : கோயிலில் குழப்பம்? கொடிய செயல் அது.
பாதகம் புரியவும் பயப்படான் என்கிருய்?

சாத்தனுர் : அப்படியேதான், ஐயே. நாம் தொழும்
சாமிகள் எல்லாம் சாமியே அல்லவாம்.
எங்களைப் போலவே இருந்து மடிந்து
மனிதருக்குள்ள தனி நலப்பாட்டினுல்,
பெருமையும் புகழும் பெற்ற முன்னுேரையே
சாமிகள் என்று பேணுகிருேமாம்.
நாமோ நேற்று நமது கோயிலில்
பொங்கலும் செய்தோம், பூசைகள் பண்ணினுேம்.
தாரை தப்பட்டைகள் தாக்கி முழக்கினுேம்.
ஆடும் கோழியும் — சேவலும் — அறுத்தோம்
பாடினுேம்; ஆடினுேம்; பரவினுேம்; பணிந்தோம்.
குடங்குடமாகக் கொண்டு வந்து
கள்ளும் படைத்தோம்; கடவுளர் வேண்டும்
நைவேத்தியமெலாம் நல்லாய்க் கொடுத்தோம்.
இப்படி எல்லாம் எடுத்த நம் விழாவையே
தப்பு — பிழை, எனத் தைரியமாக
வாதாடுகிருன், வாலிபன் நந்தன்.

வேதியர் : உடனே அவனை ஓங்கி அடித்து
வீட்டுக்கு அனுப்பிவிட்டீர் அல்லவா?
அல்லது சும்மா 'ஆ' என வாயைப்
பிளந்துவிட்டுக் கிளம்பினீர்களோ?

சொறியன் : (தயக்கமெல்லாம் நீங்கி)
நல்ல கதை இது! நாங்களா விடுவோம்?

சாத்தனுர் : தக்கபடி தான் தந்தோம், ஐயே!
சுத்தும் பித்தும் சுழலச் சுழல
விளாசித் தள்ளினுேம். விழுந்தே விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியர் : பாவம், பையன் !

சொறியன் : பாவமும், கீவமும்.

வேதியர் : செத்திருப்பானோ சிறுவன் ?

சொறியன் : சீ, சீ !

அப்படி ஏதும் அவப்பழி நடந்தால்
இத்தனை நேரம் எட்டாதிருக்குமா,
செத்தவீட்டொலி நம் செவிகளில் ?

வேதியர் : சொறியா !

நீங்கள் செய்தது நியாயம் தானே !
அப்படி இருக்கவும் அதுக்காய் ஏன் நீர்
பதற்றப்பட்டுப் பதுங்கிச் சாகிறீர் ?
அஞ்சுதல் வேண்டாம்.

சொறியன் : ஐயே ! தங்கள்
விஞ்சிய கருணையின் மேன்மையால் அல்லவோ
நாமெலாம் வாழ்கிறோம் !

வேதியர் : நல்லது. வேறும்
செய்தி உள்ளதா ?

சாத்தனர் : திரு மிக உடையோய் !
தில்லை என்று ஏதோ சிவன் கூத்தாடும்
கோயில் ஒன்றுஉண்டாம். கும்பிடும் பொருட்டாய்
அங்கே போகும் ஆசை பிடித்து
நாளும் பொழுதும் அதையே நந்தன்
பேசிப் புலம்புவான். பித்தனாய்ப் போனான்.

வேதியர் : சிதம்பரம் போகவா ? சீ, சீ ! புலையரும்
பதம்பெற எண்ணவா பார்க்கிறார் ? நல்லது !
அந்தப் புனித ஆலயப் பெயரையே
உச்சரிப்பதற்கும் உத்தமக் குலத்திற்
பிறந்திடல் வேண்டும் ; பேரைச் சொல்லவும்
தகுதியில்லாத சாதியிற் பிறந்தவன்
சிதம்பரம் போகவா எண்ணினான், சிறுமகன் ?
சுதந்திரம் இல்லாத் தொண்டு செய் அடிமை
சிதம்பரம் போக என்று துணிகிறான் ?

சாத்தனர் : ஏதோ அறியோம். இவனோ ஒருவன்
தீதே புரியும் செயலில் முனைவான்.
இவனோடழிவார் இன்னும் சில பேர்
சிவனே கதி என்று திரிந்திடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியர் : தவமே பெரிதென்று தளம்பல் இலர்
உவமானம் இலாரும் உணர்வரிய
பரம்பொருள் தனை இவர் பார்க்கவா துணிந்தார்?

சாத்தனுர் : வரம்புகள் இடிந்து வயல்கள் சிதைந்ததை
வருந்தியே ஆண்டை அன்று சொன்னீர்களே !
அவைகளைப் புதுக்கி அமைத்து, விதைத்துப்
பயிரிட வேண்டிய பல பல கடமைகள்
உள்ளன அல்லவா ? ஒன்றையும் எண்ணுக்
கள்ளர் அவர்கள். கட்சி கட்டி
ஆண்டையை எதிர்க்கவும் ஆரம்பிப்பார்.
ஆகையால் ஐயே ! அவர்கள் செய்கையை
முளையிலே கிள்ளி முடிப்பது நல்லது.

வேதியர் : அங்ஙனமே நாம் அனைத்தையும் செய்வோம்,

சாத்தனுர் : செவ்வியோய், நாங்கள் சென்று வருகிறேம்.

வேதியர் : சென்று வாருங்கள்; சென்று வாருங்கள்.
நன்று தீதெல்லாம் நான் கவனித்துக்
கொள்கிறேன் — அந்தக் குழப்பக்காரரைத்
தக்கவண்ணம் தண்டனை கொடுத்தே
அடக்கி வைப்பேன், ஐயம் வேண்டாம்.

சாத்தனுர் : ஐயே, வணக்கம். ஆண்டையே வணக்கம்.

[ எல்லாரும் கைகூப்பி விடைபெற்றுச் செல்கிருர்கள் வேதியர் தனிமையில் விடப்படுகிருர். அவர் தமக்குள் யோசிக்கிருர். ]

வேதியர் : இவர்கள் சொல்லிப் போகிற செய்தி
மிகவும் புதுமையாய் உள்ளதே ! உண்மையில்
இளைஞன் நந்தன் எவளவு நல்லவன் ?
சுறுசுறுப்பாகவும் தொழில்கள் செய்வான்
உழுதொழில் என்ருல் உளம் நிறை விருப்பினன்.
வயலில் இறங்கினுற் செயலில் இறங்குவான்.
பொழுது போவதே அறியான் போல
உழைப்பான் அந்த உத்தமன். அவனையா
கிளர்ச்சிக்காரன் என்றிவர் சொல்கிருர் ?
விந்தை அல்லவோ ?

[ யாரோ வெளியில் வந்து நிற்கும் சந்தடி கேட்டு ]

யாரது வெளியிலே ?

[ நந்தனுரின் தாயாராகிய முத்துவும், தங்கை வள்ளியும் வணங்கிப், பணிந்துகொண்டு வருகின்றனர். முத்து முறைப்படுகிருள், வள்ளி ஒரு புறம் ஒதுங்கி நிற்கிருள். ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் : அந்தணாளரே! ஆயிரம் வணக்கம்.

வேதியர் : நீங்களா? எங்கே வந்தீர்?

முத்து : சுவாமீ!

வள்ளி : அண்ணரை இராத்திரி அடித்து நொறுக்கிக்
குற்றுயிர் ஆக்கினர் கொடியவர்; அபயம்.

வேதியர் : அடாதது செய்தவர் படாதது படுவர்.
நியாயம் தானே அவர்கள் அடித்ததும்?

வள்ளி : குற்றம் ஒன்றுமே சற்றும் அறியார்.
சிற்றம்பலவனைச் சித்தத்திருத்திய
அந்தச் செய்கை அடாததோ, ஐயே?

முத்து : (வள்ளியை அதட்டிக் கண்டித்து)
ஆண்டை முன்னிலையில் நீண்ட உன் நாக்கை ஏன்
அடக்கம் இன்றி ஆட்டுகிறாய்? பொறு.
பொடியன் சிறுவன்; புத்தியிற் குறைந்தவன்.
இளமை தொடக்கமே இப்படி ஏதும்
வழமை விரோதமாய்ச் செய்து வைப்பான்.
ஊர்ப்புறம் இருக்கும் வேப்ப நிழலில்
போய் உட்கார்வான். பொழுது சாய்வது
கூட உணரான். குனியான், மேடை ஒன்று
அமைப்பான். அதிலே அமர்ந்து கொள்ளுவான்.
இருந்தபடியே உறங்கியும் விடுவான்.
தனக்குள் ஏதோ கனக்கக் கனவுகள்
கண்டு கொண்டவன் போலச் சொண்டைச்
சுளித்துச் சிரிப்பான்; சோம்பற் பயல் அவன்
ஒரு தனிப் போக்கு! பாவம் அருமையாய்
வாய்த்த என் ஒரே மகன் இப்படியாகக்
குழம்பிய புத்தியன் ஆனான்; ஐயகோ!
எனக்குள் வருந்தி எத்தனை நாட்கள்
கண்ணீர் விட்டுக் கலங்கி இருப்பேன்!
இராத்திரி நடந்ததை எண்ண........ நான் ஏன்
பிறந்தேன்........ ஐயே, சாமீ! கடவுளே!!

வேதியர் : வள வள என்று வார்த்தையைக் கொட்டி ஏன்
வயிற்றெரிச்சலையும் கிளப்பி விடுகிறாய்?
உன் மகன் கோயிலில் உள்ள முதியரை
அவமதித்தானாம். அப்படித் தானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து : பெரியவர் நீங்கள். கருணை செய்யுங்கள்.
பித்துப் பிடித்தவன் போல நித்தமும்
பல பல பிதற்றுதல் அவனது பழக்கம்,
தயவு செய்து பொறுத்தருள் தருக.
ஐயே, நாம் பிற ஆதரவு எதுவுமே
இல்லாதவர்கள். இனிய பண்புகள்
பலவும் பொருந்திய தாங்களே கடிந்தால்,
நாங்கள் எப்படி நடத்துவோம் வாழ்க்கையை?
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லையே!
சாந்துணை எமக்குச் சஞ்சலந் தானு?

வேதியர் : கிழவி, உனது கிழிந்த வாய் பொத்து.
வள்ளீ!

வள்ளி : சுவாமி!

வேதியர் : வாடி என் முன்னுல்.

[ தாய்க்குப் பின்னுற் பதுங்கி அடக்கத்தோடு நின்ற வள்ளி வேதியர் கூப்பிட்டதும் நடுக்கத்துடன் முன்வந்து தலையைக் குனிந்தவாறு நிற்கிறுள் ]

வேதியர் : புன்கூருக்குப் போன நந்தன்
அற்புதம் ஏதோ ஆற்றினுன் என்று நீர்
கற்பனைக் கதைகள் கட்டிவிட்டிருக்கிறீர்
என்று சொறியன் எனக்குக் கூறினுன்.
ஊரை ஏமாற்றி உலகை மயக்கும்
புரளியும், புரட்டும், புளுகும், பொய்யும்
தயாரித்தீர்களாம். சனிகளே, உண்மையா?
வழி மறைத்திருந்த நந்தியை வழிவிட
அருளுமாறே ஐயனை வேண்ட
அசரீரிப்படி நந்தியார் அசைந்து
சிவனுர் கோலம் சீருடன் காட்டினுர் —
இப்படிப் புளுகுகள் இயற்றினீர்களாம்.
அப்படித் தானு அசுத்தச் சனங்களே?
ஈனச் சாதிகள்; எலும்பிலா நாக்கினுல்
வானமே சுருண்டு எம் வாய்க்குளே நுழைந்தது—
பச்சை உண்மை என்று பசப்புவீர்.

வள்ளி : [ குற்றச்சாட்டுகளைக் கேட்டுப் பொறுக்கமாட்டாதவளாக, ஆத்திரத்தை மிஞ்சிய ஆற்றுமையோடு]
ஐயே, ஐயே! அடியோம் அப்படிப்
பொய்கள் புனைந்து புளுகினேம் அல்லோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியர் : மேற்படி கதைகள் மெய் என்று நீ
எனக்குச் சொல்லித் தப்ப நினைக்கிறாய் ?
உனக்கும் முறைப்படி உதை கிதை தேவையோ ?

[ வேதியர் இருக்கையை விட்டு எழுந்து அடிக்கும் பாவனையில் ஆவேசமாக முன் வருகிறார். வள்ளி பயந்து கைகளை விரித்து உயர்த்திப் பிடித்தவாறு பின்வாங்குகிறாள் ]

வள்ளி : அண்ணருடனே புன்கூர் போன
மூத்ததம்பி அம்மான் இருக்கிறார்.
அவரையே நேரிலே கேட்டுப் பார்த்தால்
உண்மை தெரியும், உத்தமப் பெரியீர்.

வேதியர் : [ இகழ்ச்சியாக ]

அவனும் உங்கள் அம்மான் தானே !
உமக்கிதமான உயர்ந்த பொய்களை
மெய்யே என்று விளம்புவான், விளம்புவான் !

வள்ளி : குற்றம் நாம் ஏதும் அறியோம். கொடிய
சூழ்ச்சிகள் எதுவும் சூழ்ந்தோம் அல்லோம்.
எவரையேனும் ஏமாற்றுதற்கும்
எங்களுக்கு விருப்பமில்லை.
செய்யாப் பல பல குற்றச்சாட்டுகள்
எங்கள் மேலே சுமத்தினால், ஐயோ !
எப்படி நாங்கள் இனிமேல் உய்வோம் ?
கருணை செய்யுங்கள்.

வேதியர் : கழுதைகள் — போங்கள்.
நரிகள் நீங்கள் தந்திரசாலிகள்.

[ முத்துவும் வள்ளியும் போகப் புறப்படுகிறார்கள். அப்பொழுது அவர்களுக்கு வேதியர் கட்டளை இடுகிறார் ]

வேதியர் : நந்தனை உடனே வரச்சொல்.

வள்ளி : [ சிணுங்கல் இன்னும் பூரணமாக முடிவடையாத குரலில் ]
சொல்கிறோம்.

[ முத்துவும் வள்ளியும் போகிறார்கள். வேதியர் மீண்டும் ஒரு முறை நிலைமைகளைத் தமக்குள் அலசுகிறார். முற்றத்தில் அங்கு மிங்குமாக, பல வேறு வேகங்களில் அவர் போடும் நடை அவரது சிந்தனையின் தீவிரத்தைக் காட்டுகிறது. ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியர் : பெட்டை பேசிய விதத்தைப் பார்த்தால்........
திட்டவட்டமாய்த் தெளிவாய் அன்று
மூத்ததம்பியும் இதையே கூறினன்.
சங்கதி உண்மையாய் இருக்குமோ ? இராது !
அறுதொழில் பயிலும் அந்தணாளர்
பலபேர் நிறைந்த பழைய ஊர் இது.
வணிகரும் பலபேர் வாழ்கிறார் இங்கே.
மன்னர் குலத்தின் வழிவந்தோன் எனத்
தன்னைக் குறித்துத் தருக்குடன் பேசித்
துணைவேந்து என்றும் சொல்லித் திரியும்
சுப்பராயனும் ஆதனூர் வாழ்வான்.
துப்பரவான சூழலில் வாழும்
வேளாளர்களும் மிகவும், மிகவும்
வாழும் மகிமை வாய்ந்தது இவ்வூராம்.
இத்தனை உயர்ந்த குலத்தவர் மத்தியில்
ஆன்மஞானம் அலரவில்லையே !
சிவன் ஒளி சற்றும் சிறக்கவில்லையே !!
அவ்வாறு இருக்கவும் அறியாமையிலே
நாளும் கிடந்து நலிவோர் சூழலில்
அழுக்கு மல்கிய அருவருப்பான
துர்மணம் பரப்பும் புலையர் சூழலில்,
ஈசன் உணர்ச்சி — எழுச்சி உண்டு என்றால்
எப்படி நம்பலாம் ? இது வெறும் சதியே !
ஏதோ இழிந்த சூது இதில் இருக்கும்.
எதற்கும் அவனே வரட்டும். கதைத்து
மிரட்டிப் பார்த்தால் வெளிப்படும் ஏதும்.

[ நந்தனார் வந்து கும்பிடுகிறார். நந்தனாரின் முன்னிலையில் வேதியரின் மிடுக்கும் தருக்கும் சிலசில சமயங்களிலே அடங்கி அடங்கிப் போவதை நாம் இப்போது பார்க்கிறோம். ]

நந்தனார் : ஐயே, நந்தன்.

வேதியர் : [ திடுக்கிட்டுத் திரும்பி நந்தனாரைப் பார்க்கிறார், வேதியர், ]

அடடா !

[ சென்ற இரவு கோயிற் குழப்பத்தில் அடிபட்ட காயங்களுக்காகப் பல கட்டுகள் போட்டுக்கொண்டு நிற்கும் நந்தனாரை ஏற இறங்கப் பார்க்கிறார், வேதியர். ]

நந்தனார் : நாளை நான்
சிதம்பரம் போகவேண்டும். அதற்கு
விடை தந்தருளுக வேதியர் பெருமரே !

894.8112
MUR
AR

119814



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

வேதியர் : சிதம்பரமா ? அது சித்தர், யோகியர்
ஞானியர் வணங்கும் நல்ல ஆலயம்.
அங்கு போய் உன்னால் என்ன ஆகும் ?

நந்தனார் : கோபுரவாசலின் இப்புறம் நின்றே
ஆயினும் நான் என் அம்பலவாணனைக்
கண்கள் குளிரக் காணுதல் வேண்டும்.

வேதியர் : [ ஆதரவாக நந்தனாரின் மனத்தை மாற்ற முயற்சி செய்கிறார். ]

தம்பி ! நந்தன், தடுக்கிறேன் என்று நீ
என்மேற் சற்றும் வெறுப்புக் கொள்ளேல்.
அன்பால் இதை நான் ஆதரவாக. உன்
தந்தையைப்போலவேசொல்கிறேன்.முந்தையோர்
ஒவ்வொருவர்க்கும் அவ்வவர் பக்குவக்
கிரமப்படியே கிரியைகள் வகுத்துளார்.
சுடலை மாடன், தூறித் தூண்டி,
இடையன், நல்லான் — இவர்களை ஒத்த
சாமியைக் கும்பிடல் உனது சார்பிலே.
பிறந்தவர் செய்யத்தக்க பெருங்கடன்.
உயிர்ப்பலி கொண்டே உவக்கும் அச் சாமிகள்.
கள்ளுக் குடித்தால், களிப்பு மிகுவதை
நீயே அறிவாய். நீங்கள் கும்பிடும்
சாமிகள் கள் மிக விரும்புவார் ; ஆமடா !
கள்ளுக் குடித்தால், காரியம் எல்லாம்
சோம்பல் இன்றிச் சுறுசுறுப்பாகச்
செய்யலாம். உடல் நலம் சிறக்குமல்லவா ?

நந்தனார் : அய்யே ! நானே அமுதம் குடித்தவன்.

வேதியர் : அமுதமாவது, ஆணவமாவது !
[ சீற்றம் வந்துவிட ]
பொத்தடா வாயை. பொறுக்கி, முட்டாள்.
பாவம், பொடியன் ; பைத்தியம் குறைய
ஏதும் செய்யலாம் என்று பார்த்தால்,
அடம் பிடிக்கின்றான். அழுக்குச் சனியன்.

நந்தனார் : [ வேதியர் பேசியவற்றைச் செவியில் வாங்கிக் கொள்ளாத நிலையில் ]
நடேசனிடம் நான் நாளையே செல்ல
அனுமதி வேண்டும், ஐயே ! ஆண்டையே !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியர் : வேலையைச் செய், போ.

நந்தனர் : [ வேலை என்ற சொல் நந்தனர் செவியிற் பட்டதும் அது மந்திரம் போல வேலை செய்கிறது, ]
உழுதும், விதைத்தும்,
மறுத்தும், சாறியும், வரம்புகள் கட்டியும்,
வாய்க்கால் நீர் வர மடையைத் திறந்தும்,
வானம் தரும் என மழைக்குக் காத்தும்,
புல்லுப் பிடுங்கப் போயும், வந்தும்,
அரிவாள் தீட்டி அரிவி வெட்டியும்,
உப்பட்டிகளை ஒன்றாய்ச் சேர்த்தும்,
நெற்போர் வைத்தும், நிலத்திற் சிந்திய
மணிகளைப் பொறுக்கியும், மாடுகள் பிணைத்துச்
சூடு மிதித்தும், தூற்றியும், ஏற்றியும்,
மாறி, மாறி இவைகளைச் செய்வேன்.
அவைகளைச் செய்ய நான் மறுப்பெனோ, ஐயே ?
தொழிலே எங்கள் உயிராம், உண்மை.

[ இப்போது வேறொரு சுருதிக்கு நந்தனரின் பேச்சு மாறுகிறது. ]

விதைப்பதும் அறுப்பதும்-இறப்பதும், பிறப்பதும்
பிறப்பதும் இறப்பதும் அறுப்பது முடியுமா ?
சிறப்பதே என்று சிறிதுணரீரோ ?

வேதியர் : [ பொறுமை இழந்து அலுத்துக் கொள்கிறார். ]
வெறுக்கிறேன் உன்னை. விசரா, மடையா,

நந்தனர் : பொறுத்தருள் புண்ணியா, புல்லன் நான்.

வேதியர் : [ சீற்றம் தணிந்து ]
தம்பி,
இந்தப் போகம் எருவை நிறையப்
போட்டுப் பார்ப்போம் ; புதியதோர் முறையில்
நாற்று நட்டால் நற்பயன் கிடைக்குமாம்.
வேற்றூர் சென்று திரும்பிய வேலவன்
அந்த முறையை அறிந்து வந்திருக்கிறான்.
நந்தன், நீ அந்த நாற்று நடுமுறை
பயின்று நம் வயலிலே பரிசோதனைகள்
நடத்துதல் வேண்டும்.

[ வயற்செய்கையில் நந்தனருக்குள்ள ஈடுபாட்டைக் கையாண்டு, அவருடைய ஆலயப் பித்தத்தைத் திசை திருப்ப முயன்ற வேதியரின் பேச்சுக்கு ஒரு தற்காலிக வெற்றி கிடைக்கிறது. ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தனார் : நாளையே சிதம்பரம்
செல்லுதல் வேண்டுமே என்று நான் விரும்பினேன்.
ஆயினும் இப்படி ஆண்டையே வேண்டலால்
இம்முறை நாற்று நடவு முடிந்தபின்,
செம்மையாய் யாவுமே செய்து முடிந்தபின்
சிதம்பரம் போவேன், சிறியேன், ஐயே !

வேதியர் : [ பெரிதும் மகிழ்ந்து ]
புத்திசாலி நீ.

நந்தனார் : புன்கூர்ச் சிவனார்
சித்தமே எல்லாம்.

[ புன்கூர் என்றதுமே, அங்கு நடந்த அற்புதம் வேதியருக்கு நினைவு வருகிறது. நந்தனாரிடம் நேரடியாக அச்சம்பவத்தின் உண்மை-பொய்யை அறிந்துவிடத் துடிக்கிறார். பரிந்து பேசுகிறார் ]

வேதியர் : நந்தா ! அன்று நந்தி நகர்ந்தமை
உண்மையா ?

நந்தனார் : [ தம்முடைய பரவச நிலையிலிருந்து இன்னும் மீளாதவராக ]

சாமீ ! உலகநாயகன்
தண்ணருள் — அப்பனே, சாமீ, தயாபரா !

வேதியர் : [ எப்படியாவது உண்மையை நந்தனார் திருமொழியாகவே கேட்டுவிட ஆசைப்பட்டு, சீற்றம் வந்தவர் போன்று பேசுகிறார். உண்மையான சீற்றமும் ஓரளவு தலைகாட்டுகிறது. ]

ஊரிலே நீங்கள் வேண்டும் என்றே
கதை இதைத் துணிந்து கட்டி விட்டிருக்கிறீர்.
இப்படித்தானே சொறியன் கூறினன்,

நந்தனார் : [ வேதியர் முன் தம்மை நிறுவும் நாட்டம் சிறிதும் இல்லாதவராக ]
ஆகா ! எல்லாம் ஆண்டவன் சித்தமே.

வேதியர் : [ கண்டிப்பாக ]
அற்புதம் நடந்தது மெய்யா ?

நந்தனார் : ஐயே........ !

[ நந்தனார் ஒன்றும் பேசாது வாயடைத்து நிற்கிறார். ]

வேதியர் : [ ஆற்றாமையோடு ]
என்னடா, நந்தா ! இப்படி ஊமையாய்
வாய் பேசாமல் ஏன் நிற்கிறாய் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தனார் : பேசி
ஆக வேண்டியதென்ன ? யாவுமே
சிவன் செயல் என்று தெளிந்த பிறகு........

வேதியர் : [ மீண்டும் சினம் கொள்கிறார். ]
சிவன் செயல் என்று நீ தெளிந்துவிட்டாயோ ?
ஆரிடம் கற்றாய் ஞானி போற் பேச ?

நந்தனார் : கல்வி இல்லாக் கடையவன் ஐயே !

வேதியர் : இல்லாதவைகளை இருப்பவை போலப்
புனைந்துரை பேசிப் புளுகும் கலையிலே
எப்படித் தேர்ச்சி பெற்றாய் ?

நந்தனார் : [ இறைவனைத் தியானித்து ]
ஈசனே,
ஒப்பிலாய், உன்மேல் அன்பு வைப்பது
தப்பா என்ன ? சகலரும் கூடிச்
சிப்பிலி ஆட்டினார். சீவனை உலைக்கிறார்.

வேதியர் : [ குழைவுடன் ]
அற்புதம் நடந்ததா, அதைச் சொல் தம்பி !

நந்தனார் : [ வேதியரை நேரே நோக்காமல் ]
நான் இதைச் சொன்னால் நம்புவார் உண்டோ ?

வேதியர் : நீ ஒரு சொல் சொல் ; நிசம் என நம்புவேன்.

நந்தனார் : நான் ஒன்று அறியேன் ; நடேசனே அறிவான்.

வேதியர் : சீ — நீ பிடித்த பிடியை விடாதவன்.
அடம் பிடிக்கின்ற அடாத்துக்காரன்.
வேலையைப் போய்ப்பார்.

நந்தனார் : விதைப்பு முடிந்து
நாற்றுகளெல்லாம் நட்ட பின்னர்,
சிதம்பரம் போக அனுமதி வேண்டுவேன்.

வேதியர் : நட்டால் மட்டும் போதாது அப்பனே !
நல்ல விளைவும் நடைபெறல் வேண்டும்.

நந்தனார் : ஐயே, ஐயே ! ஆண்டையே அபயம்.

வேதியர் : போடா, போடா........ புத்தி கெட்டவன்.

[ வேதியர் வீட்டுக்குட் சென்றுவிடுகிறார். ]

நந்தனார் : தில்லை நடேசனே, செய்குவது அறியேன்.
எல்லை இல்லா இடர்ப்பட என்னை
விதித்தது ஏன் அப்பனே ? மெய்யனே, ஐயனே !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதித்து நான் உனது விழுமிய தில்லையின்
புனித மண்ணிற் புரளுவது எந்நாள் ?
ஏதோ ஒரு வழி எனக்கு அருள் அப்பனே !
மாதொரு பாகா, வரம்பில் உணர்வெனும்
ஓதிட இயலா உயர்வுடையவனே !
அத்தனே, முத்தனே ! அருள் செயல் வேண்டும்.
கற்றிலேன், சிறியேன், கடவுளே போற்றி.
ஒப்புயர்வில்லா ஒருவனே போற்றி.
கதியே போற்றி, கனியே போற்றி.
விதியே போற்றி, விறலே போற்றி.
என்னுருயிரே இறைவா போற்றி
தென்னுடுடைய சிவனே போற்றி.
போற்றி போற்றி புராதனப் பொருளே !
போற்றி போற்றி மெய்ப் புகலே போற்றி.

[ நந்தனுர் கைகூப்பியவாறு கண் மூடித் தியானத்தில் ஆழ்ந்து விடுகிருர். மேடை இருளத் திரை விழுகிறது. ]

## இரண்டாம் அங்கம் — மூன்ரும் காட்சி

[ வேதியர் இல்லத்தின் முன்றில். சாத்தனுர், சொறியன், மூத்தார் முதலியோருடன் பிறரும் உள்ளனர். பரபரப்புடன் காணப்படும் வேதியர் மூத்தாரைப் பார்த்து அங்கலாய்ப்போடு கேட்கிருர். ]

**வேதியர் :** உண்மையா இதுவும் ?

**மூத்தார் :** உயர்வுடைப் பெரியீர்
கண்களால் நேரிலே கண்டதே சொல்கிறேம்.

**வேதியர் :** நேற்று வெறுவெளியாகக் கிடந்த
நிலத்தில் இன்று நெற்பயிர் உண்டா ?

**மூத்தார் :** வெறும் பயிர் அல்ல ஆண்டே, கொழும்பயிர்
முற்றிப் பழுத்த முழுமணிக் கதிருடன்
வெற்றி மிடுக்குடன் விளங்கும் வயல் வெளி.
கதிர்களின் பாரம் கனத்துப் பதிக்கத்
தலையைக் குனிந்து தரையைப் பார்க்கும்
பயிர்களின் பசுமை பார்வை விருந்தே !

**வேதியர் :** எப்படி இந்த அற்புதம் நிகழ்ந்ததோ ?
முற்பகல் விதைக்கப் பிற்பகல் விளையுமா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன நூல்களிற் புலவர்கள் பாடும்
கதைகளைப் படிக்கையில், கடவுளின் செயல் என
எதையெல்லாமோ இயம்பக் கேட்டுளேன்.
ஆயினும், அவை பழங்கால நிகழ்வுகள்.
புண்ணியம் மிகுந்த புராதன நாளில்
எண்ணிய எண்ணியாங்கு எய்துதல் இயல்பென
நம்பியிருந்தேன். நமது நாளிலே
வியக்கத்தக்க விந்தை நிகழ்வுகள்
கண் முன்னாலே காண முடியுமா ?
விண்ணவர் பிரானின் வியப்புகள் கலியிலும்
உண்மையில் நிகழுமா ? முன்பு நான் தருக்கினால்
நந்தி நகர்ந்த நற்செயல் கூடப்
பொய் என்றல்லவா போற்றுதல் ஒழிந்தேன் ?
அந்தோ ! நான் ஓர் அந்தணன் ஆயினும்
சந்தேகங்களின் தரிப்பிடமாயினேன்.
சொறியன் !

சொறியன் : [ கக்கத்துள்ளே துண்டைச் செருகியவாறு முன் வந்து ]

ஏன், ஐயே !

வேதியர் : தூயவன் நந்தனை
அறிவிலாதவன் என அழைக்கத் தூண்டினாய்.
புறங்கூறுவதிலே புலி நீ........ கெடுவாய்
அறங்கூறுபடல் அநியாயம் அடா !
ஓடிப்போடா, உப்பிலி வெளியிலே
பயிர் நிறைந்துள்ளதா என்பதைப் பார்த்து வா.
புன்கூர்ச் சம்பவம் பொய் என மொழிந்த
உன் தீச்செயலின் பிராயச்சித்தமாய்
இந்தத் தடவை நடந்ததைச் சொல்லு.
பெருக்குதல், பிரித்தல் இன்றியே பேசு.
மூத்தார் நந்தனின் மாமனார் ஆதலால்,
வார்த்தையில் மிகுதிப்பாடும் இருக்கலாம்,
எதற்கும் நீ போய் இது நிசமா எனப்
பார்த்துச் சொல்லு. போ........

சொறியன் : பணிகிறேன் அடியேன்.
கட்டளைப்படியே காரியம் செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியர் : (சொறியன் சென்றதும், மூத்தாரை ஓரளவு ஆதரவுடன் அண்மையில் அழைக்கிறார்.)
மூத்தான், இங்கே முற்புறம் வாடா.
நேற்று மாலை நந்தனைப் பார்த்தையா ?
எப்படி இருந்தான் ? என்ன செய்தான் ?
எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லடா.
நந்தன் முன் செல்ல நாணுகிறேன், நான்.

மூத்தார் : ஐயே, நேற்றும் அவரை நான் பார்த்தேன்.
செய்யும் செயல்கள் சிவன் செயல் என்றார்.

வேதியர் : அது சரி, மூத்தான். அனைத்தும் விபரமாய்ச்
சொல்லச் சொன்னால் சுருக்கிவிட்டாயே !

மூத்தார் : 'நாளையே சென்று நடேசனைக் காண்பேன்'
என்று புலம்புவார் அல்லவா நந்தனார் ?
அவ்வாறே தான் அவர் இடையறாமல்
நேற்றும் புலம்பினார். நித்திரை சரியாய்க்
கொள்வதும் இல்லை ; கூத்தும் பாட்டும் !
சில சில வேளை சிவனே என்பார்.
உலகன், வடிவேல், உயரியன், வயிரவன்
முதலிய சிலரை முற்படக் கூட்டி
ஒருங்கு சேர்த்தே உள்ளம் உருக்கும்
பண்ணார் இன் தமிழ் பாடி இருப்பார்.
வயற்புறம் சென்று மனப்பயத்துடனே
எதையோ நினைந்தார் ; ஏங்கினார். மீண்டார்.
நெடுமூச்செறிந்தார். நின்றார், இருந்தார்.
வள்ளியும் தாயும் வருத்தப்பட்டனர்.

வேதியர் : வள்ளி நந்தரின் மனத்தையும் போக்கையும்
ஓரளவு அறிவாள்.

மூத்தார் : உண்மை, உண்மை !
ஆயினும் தாயோ அஞ்சிச் சாகிறாள்.
நோய் என எண்ணியும், பேய் என நினைந்தும்
மருத்துவர்களையும், மந்திரிப்போரையும்
சாத்திரிமாரையும் தருவிக்கின்றாள்.
அவர்களால் நந்தனார் அடையும் தொல்லை
இத்தனை என்றே இயம்புதல் அரிது.

வேதியர் : பாவம், நந்தன். பலரும் அவனைச்
சரியாய் விளங்கும் தகுதி இல்லாராய்ச்
சங்கடம் கொடுக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தார் : சங்கரன் கருணையின்
பாத்திரமான பண்பினர் என்பதை
ஏனோ ஒருவரும் எண்ணுவதில்லை.
கலகக்காரனாய்க் காண்பவர் சிலபேர்
குழப்பக்காரனாய்க் கொள்பவர் சிலபேர்.
கிளர்ச்சிக்காரனாய் — கீழ்மகனாக,
பழிப்புக்காரனாய்ப் பார்ப்பவர் சிலபேர்.
நாத்திகன் என்றும் நகைப்பவர் சிலபேர்.
புரட்சியன் என்று புகல்பவர் சிலபேர்.

வேதியர் : பாவம் நந்தன் ! வயலால் மீண்டதும்
என்ன செய்தான் என்பதைச் சொல்லு,

மூத்தார் : நாளை நான் உன்னை நாடி வருவேன்.
எப்படியாயினும் இன்னருள் புரிவாய்,
ஈசனே, என்று பேசாதிருந்தார்.
இன்னருள் செய்யாது இருப்பாய் ஆயின்
என்னுயிர் விடுவேன் என்று புலம்பினார்.
பின்னர் ஒன்றுமே பேசா மவுனியாய்
ஐயன் பேரையே அகத்திற் பதித்துத்
தியானித்திருந்தார், சில நாழிகைப் பின்
கண்கள் விழித்தார். ' கருணை புரிந்தான்
ஈசன் ' எனவே இயம்பி ஆடினார்.

சாத்தனார் : நந்தனார் வருகிறார். நந்தனார், நந்தனார் !

[ நந்தனார் ஆனந்த பரவசராகி வந்து வேதியர் முன் பணிகிறார் ]

நந்தனார் : அந்தணாளரே ! அருள் புரிந்து எனக்கு
விடை தரல் வேண்டும். விமலன் நடேசனைத்
தரிசனம் செய்வேன் ; தயவுசெய்தருளுக.

[ நந்தனாரைக் கண்டதுமே வேதியர் பேரன்பு மிக்கு, அடியவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி மன்னிப்புக் கேட்கிறார். நந்தனார் இல்லாத சமயத்தில் அவரது பெருமையிற் சந்தேகம் கொள்ளும் போக்கு வேதியருக்கு இருந்தாலும், இப்போது தம்முன் வந்துள்ள பெரியாரைக் கண்டதும் அவ்வாறு சந்தேகிக்கும் ஆற்றலையே இழந்துவிடுகிறார். சற்று முன்னர், வயலிலே பயிர்கள் விளைந்து முற்றியிருப்பது உண்மையா என்று அறிந்து வருமாறு சொறியனை அனுப்பியது, எஞ்சி மிஞ்சியிருந்த சிறு சந்தேகத்தைக் கூட அறவே ஒழித்துவிடல் வேண்டும் என்ற ஆசையினாலேதான். ஆனால், நந்தனாரை இப்போது கண்ட வேதியர் தம் முனைப்பெல்லாம் அடங்கப்பெற்றவராக முற்றிலும் பணிந்து விடுகிறார். ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியர் : அப்பனே, நந்தா ! அடியவன் உனக்கு நான்,
தப்புகள் பலவும் தமியேன் இதற்கு முன்
செய்திருக்கின்றேன். சிறியேன் பிழைகளை
மன்னித்து என்னை வாழ வைத்திடுக.

நந்தனார் : [ கூச்சத்தோடு ]
வேதியர் பெரும ! வேண்டாம், வேண்டாம் !
ஆதிரை நாயகன் அடியவர்க்கு எளியவன்.
என்னையே தாங்கள் இரங்கி வணங்கி
அடியில் விழுவதா ? அடுக்குமா, ஐயே ?
வேண்டாம், வேண்டாம், வேதியர் பெரும !
தீண்டத் தகாத சார்பில் நான் பிறந்தவன்.
நீண்டுயர் பல் புகழ் நிறைந்த அந்தணர்
என் காலடியில் விழுவதா ? ஈசனே !
பெரியவர் தாங்கள்.

வேதியர் : பெரியர் ஆர், சிறியர் ஆர் ?
பொன்னம்பலவன் பூங்கழல் போற்றியே
அன்னவன் பேரருள் அடைந்தவர் பெரியவர்.
பிறப்பினால் அமையும் சிறப்பெனக் கூறுதல்
மறுப்பதற்குரிய வாக்கியமாகும்.
நாற்பாற் குலங்களுள் மேற்பாற்பட்ட
பார்ப்பனக் குடியிலே பிறந்தேன், பாவியேன்.
ஆர்ப்புடன் ஒலி செயும் ஆரிய வேதம்
சீர்ப்பட ஓதினேன் ; தெளிந்தேன் இல்லையே !
பதினெண் புராணமும் படித்த முதியரே
கதி என்று எண்ணி, அக்கதைகளைக் கேட்டேன்.
உரியவாறே எரிதழல் ஓம்பினேன்.
பரிசனர் சூழ்தரப் பகட்டுடன் வாழ்ந்தேன்.
ஆயினும் மெய்ப்பொருள் அறிந்தேன் இல்லையே !
பூசையும் வேள்வியும் புரிந்தேனாயினும்
ஆசைப் பேயின் அழுங்குப் பிடியிலே
விடுதலை இன்றி வேதனைப்பட்டேன்.
நந்தனே ! நீயோ நவையிலாப் பெரியவன்.

நந்தனார் : அந்தணாளரே ! அடியேன் தலையில்
அளவு மீறிப் புகழைச் சுமத்தினால்....
ஆணவம் மீண்டும் அரும்புமே.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதியர் : ஒரு முறை
விடுதலை பெற்றவர், மீண்டும் — திரும்பவும்
படுகுழிப் படுவரோ ? பரம்பொருள் ஆயினோர்,
நிரந்தரமாகவே நிற்பர் அந்நிலையிலே.

நந்தனார் : விடை தரல் வேண்டும், வேதியரையா !

வேதியர் : விடை தர நான் ஆர்? மேலவர் நீர் என்
தடைகளை எல்லாம் தாங்கி இருந்தீர்.
என் பிழை எல்லாம் மன்னித்தருளுக.
குருவாய் எனக்குத் திருமொழி அருள்க.

நந்தனார் : நானா ! குருவா ? நல்ல கூத்து இது.

வேதியர் : ஆனேறமரும் ஐயருக்கடியவர்,
வையகத்தாரால் வணங்கத் தக்கவர்,
குருவாய் நினைந்து கும்பிடத் தக்கவர்,
எனக்கு உபதேசம் ஈந்தருள் வழங்குக.

நந்தனார் : அடிமை நான் ஐயே ! ஆதலால் தங்களுக்கு
உபதேசம் செய ஒப்புக்கொள்கிறேன்,
தங்கள் வேண்டுதல் தட்டமாட்டாமையால் !

[ வேதியர் கைகூப்பியவாறு பணிந்து உபதேசம்
வேண்ட நந்தனார் உபதேசிக்கிறார். ]

சிவன் எனும் செம்பொருள் சித்தத்து இருத்தினால்,
அவன் மயமாகவே ஆகலாம் நாமெலாம்.
அதுதான் ஐயே ! ஆன்ம சமர்ப்பணம்.
எம் செயல் எதுவுமே இல்லை. எல்லாம்
அவன் செயல் எனவும் அறிதல் வேண்டும்.
அவன் செயல் எல்லாம் ஆம் எனச் சொல்வதால்,
சோம்பி இருப்பதே மேம்பாடென்று
கொள்ளுதல் வேண்டாம். குவலயம் இதில் நாம்
செய்யவேண்டிய சில பல உண்டு.
அவற்றை மிகவும் ஆர்வத்துடனே
செய்வதே தருமம் ; செய்கையின் பலன்மேல்
ஆசை வைத்தல் அடாத காரியம்.
தம் செயற்பலனைத் தாம் காமுறலும்
அறம் ஆகாது என அறிஞர் கூறுவர்.
அங்ஙனம் இருப்பவும், பிறர் செயற்பலனைத்
திருடுதல் என்பது, செய்யத் தகாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் இழிந்த வினையாம் என்பதை
உலகினர் அறிய உரைப்பதே அறமாம்,
அவரவர் செயற்பலன் அவரவர் எய்த
நேர்வழி சமைதல் நியாயம் என்பதால்
அநீதி அனைத்தையும் அகற்றுதல் வேண்டும்.
அநீதி யாவும் அகலுமே ஆயின்,
ஆன்மநேய அமைதி பொருந்தும்.
ஆன்மநேய அமைதி பொருந்தினுல்
ஞானமும் தவமும் நலமும் மலியும்.
ஞானமும் தவமும் நலமும் மலியின்
மோன முழுமை முதிர்ச்சி கிடைக்குமாம்.
மோன முழுமை முதிரின்
'நான்' கெட ஒன்று நடிக்கும் மன்றிலே.

வேதியர் : உய்ந்தேன் அடியேன்; உயர்ந்தேன் சிறியேன்.

நந்தனுர் : நைந்து ஏன் ஐயே, நந்தனைத் தொழுகிறீர் ?
நானே அடிமை. நடேசனைக் காண
விடைதரல் வேண்டும் வேதியரையா !

வேதியர் : தடைசொல நான் ஆர் ? தயக்கம் வேண்டாம்.
சென்று வருக. சிதம்பரம் காண்க.
மன்றில் நடிக்கும் மணவாளருடன்
ஒன்றிய உரிமையால் உவகை கொள்ளுக.

நந்தனுர் : நன்றி மிகவும். நன்றி, என் ஐயே !
இன்றே எனது பிறவிப் பயனெலாம்
நிறைவாய் அருளினுன் நின்மலன் எனக்கு.
இப்போதே நான் புறப்படல் வேண்டும்.

[ முத்துவும் வள்ளியும் ஓடி வருகிருர்கள். ]

மூத்தார் : அப்பா, நந்தா !

வள்ளி : அண்ணு !

முத்து : தம்பீ !

நந்தனுர் : [ பரவச நிலையில் மூழ்கியவராக ]
நீங்கள் ஆர் ? அறியேன்.

வள்ளி : நியாயமா அண்ணு,
இப்படி எங்களை எடுத்து வீசுதல் ?

முத்து : நாங்களும் வருகிருேம் நடராசாவிடம்

மூத்தார் : சுற்றத்தவரின் சொந்தமும் பந்தமும்........

வேதியர் : அற்றுவிட்ட அடியவர், நந்தனுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி : ஆயினும் நாம் அவர் அடிகள் தொடருவோம்.

நந்தனார் : நோயிலும், பிணியிலும், பாயிலும், மடியிலும்
என்னை வளர்த்த அன்னையே !

[ அன்னையாரை அடையாளம் கண்டுகொண்டு
தாழ்ந்து வணங்குகிறார். ]

முத்து : தம்பீ !

நந்தனார் : என் பிறப்பின் பயன் இன்றே கனிந்தது.
அம்பலவாணனை அடைந்து காண் என்றார்,
வேதியர் பெருமான்.

வேதியர் : விண்ணவர் பிரானின்
தொண்டர் கூறிய சொற்களின்படியே
இன்று தொடக்கம் இனி நாம் நடப்போம்.

முத்து : தம்பீ ! என்னைத் தடுத்தல் வேண்டாம்.
நானும் தில்லையை நாடி வருகிறேன்.

நந்தனார் : அம்மா !

முத்து : தம்பீ !

நந்தனார் : அலுத்து உடல் குலைந்த
முதிய வயதினீர் ; முடியா நெடுவழி
சென்றால் அன்றோ தில்லையை அடையலாம் ?
ஆதலால் அவ்விடம் அடைய நினைந்து
நடக்க விரும்புதல் நல்லதன்று உமக்கே.
தில்லை மூதூர் சென்றடையாமலே
அத்தலம் காணும் அத்தனை பலனும்
இங்கே இவ்விடத்து இருந்தபடியே
தாங்கள் எய்தலாம், தாயே ! ஆதலால்,
தவிர்க தயரம். தலைவன் காப்பான்.
வள்ளீ !

வள்ளி : அண்ணா !

நந்தனார் : வாழ்க்கையில் இறங்கி
உலகியல் நலன்களில் ஊரவர் பிறரையும்
ஊக்கி விடுதல் உன் கடன் அம்மா.
மூத்தார் அம்மான் ! நீங்களே முதல்வராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மவர் மனவிருள் எல்லாம் ஒழிந்து
புதியதோர் வாழ்க்கை புலரும்படியாய்
வழி நடத்துங்கள். நான் வருகிறேன். எங்கும்
உரிமையும் பெருமையும் ஓங்குக நன்றே.

**வள்ளி :** உங்கள் வாசகம் உயர் மறை எமக்கு.

**மூத்தார் :** சிரமேற்கொண்டு செய்வோம் தொண்டுகள்.

**நந்தனர் :** நல்லது. ( வேதியரை நோக்கி ) சுவாமி !
சென்று வருகிறேன்.

**வேதியர் :** சீரியோய், செல்லுக.
ஆதனூர் பெற்ற இப் பேற்றினை யாதுமூர்
பெற்றதில்லையே, பெற்றம் ஊர்ந்தவா !

[ முத்து, வள்ளி, மூத்தார் பின் தொடர நந்தனர் புறப்பட்டுச் செல்கிறார். நிற்கும் பிறர் அவரை வணங்கி வழிவிடுகிறார்கள். வயலைப் பார்த்து வருவதற்காக வேதியரால் அனுப்பப்பட்ட சொறியன் ஓடோடி வருகிறன். ]

**சொறியன் :** ஐயே, வயலில் அனைத்தையும் பார்த்தேன்,

**வேதியர் :** என்னதான் பார்த்தாய் ?

**சொறியன் :** நாற்பது வேலியும்
நன்ருய் விளைந்து நிற்கிறதாயினும்........

**வேதியர் :** என்னடா, மடையா ! இன்னும் உன் நரிக்குணம்
போகவில்லையே, புத்தி கெட்டவனே !
எதைப் பார்த்தாலும் அதில் ஒரு சிறிய
சொட்டை சொல்லாமற் சுகப்படாது உனக்கு.
முத்தரைப் பார்த்து. ''மூடா'' என்று நான்
கத்தும்படியாய்க் கதைத்தவன் நீ தான்.
ஓடடா, எங்கே ஆயினும், உலுத்தா !
நாடெலாம் போற்றும் நந்தன் என் தொண்டனய்
வந்தான் என்பதென் மாபெரும் பேறே !
எந்தாய் ! ஈசா, இறையவா, உய்ந்தேன்.
வேறுர் இந்தப் பேறுகள் பெற்றுர் ?
ஈறே இல்லா எம்பிரான், முதல்வன்
கூத்தன் அருளினன் போற்றி.
யாத்திரை சென்ற நந்தரே போற்றி.

[ வேதியர் பக்தி சிரத்தையுடன் கைகள் தலையிலேற்றி வணங்கு கிறர். மேடை இருளத் திரை விழுகிறது. ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்ரும் அங்கம் — முதலாம் காட்சி

சூத்திரதாரன் : வேதியர் விடை கொடுத்தார்
போயினர் சிவ மனத்தார்
சாதியின் கடும் பிடியும்
சற்றே தளர்ந்ததையா !
வேதியர் விடை கொடுத்தார்........

கோபுர வாசல் நோக்கி
கும்பிட்ட கைகளோடே
போயினர் சிவமனத்தார்
வேதியர் விடைகொடுத்தார்.
வேதியர் விடை கொடுத்தார்........

ஆதியை நினைந்த வண்ணம்
அவர் சென்ருர் ; பிறரோ என்ருல்
தீதுகள் களைய என்றே
சில செயல் செய்யலாஞர்.
வேதியர் விடை கொடுத்தார்... ....

[ திரை விலகுகிறது. அம்பலவாணர் கோயில் முன்புறம். அந்தணர் பலர் கூடி நிற்கிருர்கள், நந்தஞர் வரவை எதிர்நோக்கி. ]

அப்புதீட்சிதர் : ஐயரே ! கேளும் அரியதோர் செய்தி.
தில்லையின் எல்லையில், சிவப்பழமாகிய
அன்பர் உள்ளாராம். ஆமாம், நந்தஞர் !
பண்பு வாய்ந்த பரமஞானியார்.
புறத்தோற்றத்திலே. போற்றத் தகுந்த
தன்மை இலாராய்த் தரிசனம் கொடுப்பினும்.
உண்மையில் அவர் மிக உயர்சால்பினராம்.
தேவரும், மூவரும், சித்தரும், யோகரும்,
யாவரும் வணங்கி ஏத்தத்தக்க
அருமையும் பெருமையும் அமைந்த ஒருவர் !

அந்தணர்—1 : அவரை நேரிலே கண்டு பணிந்தே
உரியவாறெல்லாம் உபசாரங்கள்
நல்கிப் பரவுதல் நம் கடஞகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர்—3 : எங்கே நந்தனுர் ? எங்கே காணேம் ?

அந்தணர்—2 : [ சட்டென்று வெளியே போய்த் திரும்பி வந்து ]
அங்கே இல்லையே !

அந்தணர்—1 : [ மறுபுறமாக எட்டிப் பார்த்து ]
உங்குமே இல்லையா ?

அந்தணர்—3 : காணேம், அவரை ! களைப்பினுல் வாடி
இடைவழி நடுவில் நின்றுவிட்டாரோ ?

அந்தணர்—1 : கடவுளின் அடியவர் களைத்தா நிற்பார் ?

அந்தணர்—2 : விடையூருகிறவன் விரும்பினுல், உடனே
இவ்விடந்தன்னில் இராரோ நந்தனுர் ?

[ அந்தணர்—4 ஓடி வருகிருர், ]

அந்தணர்—4 : இவ்விடத்தில் தான் இருக்கிருர், நந்தனுர்.

அந்தணர்—1 : எங்கே ?

அந்தணர்—4 : அழைத்து வா.

அந்தணர்—2 : எடு, பிடி குடையை.

அந்தணர்—3 : சங்கை முழங்கு. சாமவேதத்திலே
இனியதோர் சுலோகம் எடுத்துப் பாடுக.

அந்தணர்—4 : அடியவர் திருக்குளத்தருகிலே உள்ளார்.

அந்தணர்—1 : அப்படியானுல், அப்பு தீட்சிதரே,
சென்று அவரோடு திரும்பி வாருங்கள்.

[ நந்தனுரை வரவேற்று உடன் அழைத்து வரும்பொருட்டு அப்பு தீட்சிதர் வெளியே செல்கிருர். அவருடன் வேறு சில அந்தணர் களும் செல்கிருர்கள். இதற்கிடையில், மேடையில் நிற்கும் அந் தணர்கள் பரபரப்படைந்து தமக்குட் பலவற்றையும் பேசிக் கொள்கிருர்கள். ]

அந்தணர்—4 : அவர் எதனுலோ ஆலயத்துள் வரக்
கூசி நிற்கிருர்.

அந்தணர்—1 : கூத்தனின் அடியவர்
மாசில்லாத மனத்தினர். எதற்காய்த்
தயங்கி அப்பாலே தள்ளி இருக்கிருர் ?

அந்தணர்—3 : சங்கரர் நயந்த தகவுடை நந்தனுர்
புலைக்குலத்தவராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர்—2 : புலையரா ? புலவரா ?

அந்தணர்—3 : பிறப்பின் வழியிலே பேசும் சாதிகள்
மனித வாழ்வுக்காய் வகுக்கப்பட்டவை.
இறைவனின் திருமுன் இவையெலாம் எங்கே?
விண்வெளிச் சென்றால் மேல் எது ? கீழ் எது ?

அந்தணர்—1 : ஈசனின் திருமுன் ஈனம் என்று ஒன்றும்
உள்ளதா ?

அந்தணர்—2 : நந்தனார் உடனே வரட்டும்.

[ இப்பொழுது அந்தணர்—5 ஏதோ செய்தியைச் சொல்லும் ஆவல் மேலிட ஓடோடி வந்து சேர்கிறார். மேடையில் உள்ள அந்தணர்கள் யாவரும் இவர் கொண்டு வந்த செய்தியைச் செவிமடுக்கத் தயாராகிறார்கள். ]

அந்தணர்—5 : திருக்குளக் கரையிலே தியான மூர்த்தியாய்
வீற்றிருக்கின்றார். விகசிதமுற்ற
முகமலர்ச் சுடரின் முழுமையைக் காண்போர்
கண்கள் கூசி இமைகளை மூடினார்.

அந்தணர்—1 : நெஞ்சிலே சிவத்தை நிறுத்தினார் போலும் !

அந்தணர்—5 : நெஞ்சு மட்டுமா ? நின்மலன் நினைவினால்
அவர் தாம் அருட்கனல் மூட்டி முழுகினார்.
அருட்கனல் மூட்டி, அதற்குள் முழுகிய
முத்தரைப் பற்றி யார் முற்றும் அறிவார் ?

[ அப்பு தீட்சிதர் வேர்த்தபடி சிறு நடுக்கத்தோடு வந்து செயலிழந்து நிற்கிறார். ]

அந்தணர்—1 : அப்பு தீட்சிதர் !

அந்தணர்—2 : ஆமாம் — என்ன ?
செப்புக ஐயரே !

அப்பு தீட்சிதர் : தியானித்திருந்தவர்
சிவ அருட் கனலின் தேசினாற் பழைய
உருவம் நீங்கி ஓர் புத்துருப் பெற்றார்.

அந்தணர்—1 : புதிய உருவமா ?

அப்பு தீட்சிதர் : பூசிய நீறும்,
பட்டு மேலாடையும், பராபரன் விழி மணி
அக்க மாலையும் அணிந்தவராக,
முனிவரர் போல் ஒரு மோகன வடிவினைப்
பூண்டார் அந்தப் புனிதர் — நந்தனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர்—3 : ஆலவட்டம், சாமரை, அணிக்கொடி
எல்லாம் அனுப்புக.

[ குடைகளை எடுத்து விரிப்பவர்களும். சாமரைகளை உறைகளி னின்றும் வெளியே எடுத்து, அவைகளை இரட்டுவதற்குத் தொடங்குவோரும், ஆலவட்டங்களை எடுத்து, அவற்றைப் பிடித்து நிமிர்த்துவதில் ஈடுபடுவோரும் என்று இவ்வாறு பலரும் பல வகைச் செயலில் ஈடுபட்டுத் தடுதாளிப்படுகிறார்கள். இதற்கிடை யில் நந்தனார் வந்துவிடுகிறார். அப்பு தீட்சிதர் சொல்லியவாறே நந்தனாரின் கோலம் மாறி இருக்கிறது. மூத்தார், வள்ளி, வேறும் பிறர் நந்தனாருடன் வருகிறார்கள். ]

அந்தணர்—4 : இதோ ! வருகிறாரே ! !
நந்தனார் — இவரே நாளைப் போவார்.

அப்பு தீட்சிதர்: வருக சுவாமி ! வாழ்க திருவருள்.

[ தலை மேற் கைகூப்பி வணங்கிய அப்பு தீட்சிதர், இரு கைகளாலும் வருமாறு பணிவுடன் வேண்டும் பாவனையைக் காட்டி வரவேற்கிறார். மற்றைய அந்தணர்களும் கைகூப்பி வணங்கி உருகி நிற்கிறார்கள். நந்தனார் அன்பே உருவானவராய் நடேசப் பெருமானைக் கும்பிட்டெழுந்து பரவசமாகி நின்று பரவுகிறார். ]

நந்தனார் : நடேசனின் கோயிலை நண்ணிவிட்டேனா ?
கிடைப்பதற்கரிய பாக்கியம் கிடைத்ததா ?
எந்தை மனங்கனிந்து இரங்கிவிட்டானா ?
பிறவியின் முழுப்பயன் பெற்றுவிட்டேனா ?
அருட்கடல் பரிந்தே அவன்பால் என்னை
மருட்படு மலங்கள் மடித்து, வா என்றே
அழைத்துவிட்டானா ? அருளிவிட்டானா ?
தில்லைவாழ் அந்தணர் சேர்ந்து வந்து என்னை
நல்வரவாகுக, நந்தனே ! என்று
சொல்லும்படிக்கு ஒரு சூழ்ச்சி செய்தவன்
மன்றில் நடிக்கும் வைத்திய நாதனா ?

அப்பு தீட்சிதர் : சுவாமி ! தாங்கள் தில்லையை அணைந்தது
சிவபெருமானின் திருவருள் விளைவு.

நந்தனார் : அவனருள்.... ஆகா.... அசுத்தன் நான்.கொடியன்.
என் பொருட்டாகவா இத்தனை காரியம் ?

[ அப்பு தீட்சிதரே அந்தணர்களின் தலைவராகையால், அவர் தம்மைப் பணிவன்போடு நந்தனாருக்கு அறிமுகப்படுத்திக் கொள்ள நினைந்து அவர் திருமுன் சென்று அடக்கத்தோடு சொல்லுகிறார். ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பு தீட்சிதர் : அப்பு தீட்சிதர், அடியேன்.. ....

அந்தணர்—1 : இவரே
முற்படு பரனை முதிர்ந்த காதலால்
நாளும் அர்ச்சிக்கும் நம்முள் முதல்வர் —
தலைமைத் தீட்சிதர்.

[ அப்பு தீட்சிதர் தாமே செய்யத் தொடங்கிய அறிமுகத்துக்கு அனுசரணையாக அந்தணர்—1 இவ்வாறு முழுமையாக அப்பு தீட்சிதரே தலைமைத் தீட்சிதர் என்று சொல்லி முடித்ததும், இனிமேல் தாம் தமது பதவி உரிமையோடு (உத்தியோக பூர்வமாக) நந்தனரை வரவேற்று உபசரிக்கலாம் என்ற துணிவு அப்பு தீட்சிதருக்கு உண்டாக, அவர் தம்முடைய உபசரணைக்குப் பாயிரம் போலத் தம் வந்தனத்தை மீண்டும் தெரிவிக்கிறார். ]

அப்பு தீட்சிதர் : தமியேன் வந்தனம்.

நந்தனர் : ( அவரைப் பரிவுடன் பார்த்து )
அம்பலவாணனின் அன்பரா ? ஆகா !

[ அப்பு தீட்சிதர் நந்தனருக்கு ஒரு பூமாலையைச் சூட்டி, ஒரு பட்டுச் சால்வையையும் போர்த்துகிறார். நந்தனர் தீட்சிதர் கொடுத்த திருநீற்றையும் வாங்கி அணிந்து கொள்கிறார். அப்பு தீட்சிதர் பெருஞ் சபைமுன் பேசுவார் போன்று தம் வரவேற்புரையைத் தொடங்குகிறார். எல்லாரும் அமைதியாக உற்றுக் கேட்டுக்கொண்டு நிற்கிறார்கள். ]

அப்பு தீட்சிதர் : பெரியவரே ! நும் பெற்றியை அறிந்தே
உருகி நாம் பணிகிறோம். உள்ளம் குழைகிறோம்.
இன்று நாங்கள் எய்திய பேறு
பெறுவதற்கரிய பிரபலம் வாய்ந்தது.
புலியூர் என்று போற்றப்படுகிற
நலிவிலாத் தில்லை நல்ல பெரிய
நீண்ட வரலாறு உடையதே. அந்தச்
சரித்திரம் முழுவதும் சலித்துச் சலித்துத்
தேடினுற்கூட இத்திருநாள் போல
வேறொரு நாளைக் காணுதல் அரியதாம்.
அத்தகு பெருமை, அன்பரே, தங்கள்
திருவரவாலே சிதம்பரம் பெற்றது,

[ முகமனுக்காகச் சிதம்பரத்தையே சிறுப்பித்துப் பேசும் அந்தப் பேச்சை மேலும் கேட்டுக்கொண்டு நிற்கப் பொறுக்காதவராகிய நந்தனர் இடைமறித்துப் பேசுகிறார். ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தனுர் : சிதம்பரம் என்றுற் பெருமை பெற்றதா ?
வியந்து பேசும் விருப்பம் உடைமையால்
மிகைபட அருளினீர், வேத வேதியரே !
அம்பலவாணரைப் பாடுக, அன்பரே !

அந்தணர்—1 : தில்லை மூதூர் ஆடிய திருவடி

பலரும் : வெல்க, வெல்க. வினையெலாம் மாய்க.

அந்தணர்—1 : தில்லையன் திருவடி

பலரும் : வெல்க, வெல்க.

நந்தனுர் : தில்லை நாயகனே திருவடி தருவாய்.
அல்லற் பிறவியை அறுத்தருள் புரிவாய்.

[ நந்தனுர் கண்ணீர் மல்க, இரு கையும் சென்னிமிசை எடுத்துக் கூப்பி, நடேசப்பெருமானைத் தியானித்தவாறு சில விநாடிகள் அசைவின்றி மௌனமாக நிற்கிறுர். மற்றையோரும் அவ்வாறே மௌனத்துடன் நிற்கிறுர்கள். இந்தப் புனித சூழ்நிலையைப் பிரதிபலிக்கும் மெல்லிய குழைவான இசை பின்னணியிலே இழைகிறது. நந்தனுர் பாடத் தொடங்குகிறுர். ]

நந்தனுர்: எடுத்த திருவடி அருள இன்னும் மனம் கனிந்திலதோ,
உடுக்கையணி திருக்கரனே, உத்தமனே, நித்தியனே !
இடக்கை தனில் அனலேந்தும் இனியவனே, நனி சிறந்த
நடிப்புடைய பரனே ! உன் நடன எழில் காட்டி அருள்.

எண்ணரியஅண்டமெலாம் இசைந்தசையும் படியான
பண்ணெழுப்பி ஆடுகிறுய் பரவெளியில் என உரைப்பார்
உண்ணெகிழ்ந்துன்திருக்கூத்தைஉடனே இங்கென்னுடைய
கண்குளிரக் காணுகிற கருத்துடையேன். காட்டி அருள்

வேதபுராணுகமங்கள் மிக அறியேன். சிவனே ! உன்
காதல் ஒன்றே பெரியதென்றுகசிந்துருகிவேண்டுகிறேன்
பேதமிலாதுயிர்கள்தொறும்பிணைந்துநிற்கும்பிரானேஉன்
வீதிவலம் வந்தேனை வெளியே போ எனச் சொல்லேல்

உள்ளே வா என என்பால் உபதேசம் நல்கியவா,
கள்ளூறுமலர்க்கொன்றைக்கண்ணியிணுய்விண்ணவனே !
வெள்ளேறுூர் பெருமானே, மேலவனே, வித்தகனே !!
தெள்ளியவர்சித்தத்தின் தெளிவான சிவமுதலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் புரிய வேண்டும் எனதாருயிரே, அம்மானே !
இருள்நடுவே ஆடுவதைஎன் பொருட்டுக் காட்டிஅருள்.
மருள் இரிய மலம் அகல வடிவினை நான் காண்பதற்கும்
அருகினிலே வருவதற்கும் ஆணை தர வேண்டுகிறேன்.

முற்றிப் பழுத்த கனியே,
முடிவிலா மோகனமே !
பற்றி உன் சேவடி, பாவி
பரவும்படி அருள்க.
வெற்றிச் சிலம்பின் ஒலியைச்
செவியில் விழும்படியாய்ச்
சற்றே அனுப்புக தண்புலி
யூர் உறை தாண்டவனே !

[ பாடல் முடிவடைந்ததும் தாண்ட வச் சிலம்போசை கேட்கிறது. மூலத்தானத்தில் இருக்கும் நடேசப் பெருமானின் திருவுருவம் மெல்ல அடியெடுத்து அசையும் தோற்றம் தெரிகிறது. கோயி லின் உள்ளே மூர்த்தி உள்ள இடத்திலிருந்து ஒரு பேரொளி தோன்றி மறைகிறது. அந்தணர்கள் அரோகரா, அரோகரா என்று போற்றிக் குரவை இடுகிறார்கள். நந்தனார் பரமானந்தத் தில் ஆழ்ந்து அன்பின் உருவமாகக் காட்சி தருகிறார். பின்பு ஆனந்த பரவசமாகப் பாடுகிறார். ]

நந்தனார் : நலந்திகழும் தில்லையிலே நடனம் ஆடும்
ஞான சபா நாயகனே ! இன்றென் தாழ்ந்த
குலம் கழுவி ஆட்கொண்டாய் குழைந்து நாயேன்
கொண்டாடேன், கூத்தாடேன் புளகம் எய்தேன்
விலங்கனைய பழம்போக்கை விடவும் மாட்டேன்.
விண்ணவர்கள் கோமானின் மேன்மை பாடிச்
சிலம்பொலியின் தெய்வீகத் திறத்தை ஏத்தேன்.
சீ ! என்ன இங்ஙனம் நான் தீர்ந்தவாறே.

[ நந்தனார் தம் பாடலை முடித்ததும் அந்தணர்—1 நந்தனாரைப் பணிந்து, தில்லைவாழ் அந்தணர்கள் சார்பிலே தம் வணக்கத்தை யும் போற்றுதலையும் தெரிவிக்கிறார். ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர்—1 : காட்டாதனவே காட்டும் எம்
ஈசன் கழல் ஒலிக்கும்
தாட்டாமரையின் தரிசனம்
கிட்டிய தன்மையினால்
மாட்டாது இனி எம்மை வாட்டும்
பிறவி வருத்துதற்கு.
கூட்டாக நாமும் திருக்காட்சி
கண்டு குளிர்ந்தனமே !

நாளைப் போவார் என்ற நாயகனார்
வந்த நன்மையினால்
தாளை உயர்த்தியே தாண்டவம்
ஆடும் தயாபரனின்
நீள நினைக்கப் படுகின்ற
அந்த நிசச் சிலம்பின்
தாள லயத்தினை நாங்களும்
கேட்டிடல் சந்தித்ததே.

நந்தனாரே எங்கள் கண் கண்ட
தெய்வம். நடேசனுக்குச்
சொந்தமானார் இன்று தூண்டு
சுடரைத் துதி புரிந்தே.
பந்தமாம் என்று பகரப்
படுவன பாழில் உற
எந்தையார் ஞான இசை எம்
செவிகளில் எய்தியதே,

[நந்தனார் தம் மௌனத்தைக் கலைத்து. மீண்டும் சில அருட் பாடல்களைப் பாடுகிறார். ]

நந்தனார் : நாட்டார்கள் பிறர் அணைந்து நண்ண மாட்டா
நவையில்லாத் திருக்கோலம் காட்டி வைத்தாய்.
பாட்டாலே பாடல் அன்றிச் செவியால் யாரும்
பருகி இருக்காத சிலம்போசை காதிற்
போட்டாண்ட எம்பிரான் புகழை ஏத்திப்
போற்றுதற்கும் தயங்கும் இந்தப் புலையேன் பேற
கேட்டாலும் நம்பார்கள், உலகோர், ஐயா! [றைக்
கிரீடத்தைப் பன்றிக்கும் சூட்டலாமோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய பிறவிகளை இன்றேடேயே
இறுதியுற அருள் புரிக, ஈசா ! நாயேன்
உன்னுடனே ஒன்ருகக் கலந்து போக
ஒழியாத பெருங்காதல் உற்றேன், ஐயா !

[இதுவரை ஒதுக்கத்திலே புறம்பாக நின்ற வள்ளியும் மூத்தாரும், இப்போது நந்தனரின் அருகிலே வந்து நிற்கிருர்கள். வள்ளி கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்து விடுகிருள். அவளுடைய உதடுகள் மெல்ல அசைந்து கொண்டிருக்கின்றன. ]

**நந்தனர் :**
மின்னல் எனத் தக்க இந்த உலக வாழ்வை
விட்டு விடுதலை ஈட்டும் விருப்பம் கொண்டேன்.
பின்னிய செஞ்சடை உடையாய், நீல கண்டா !
பிறையணிந்த பெம்மானே, ஆசைப்பட்டேன்.

ஆசை மிக உடையேன் நான், ஐயா ! உன்னை
அணைவதற்கும் பிணைவதற்கும். ஆளல் வேண்டும்.
பூசுரரும் பணிந்தேத்தும் புலையனைக்
புணர்ப்பித்தாய் சிறியேனை. புங்கவா, என்
மாசெதுவும் இல்லாத மணியே, வாழ்க.
வயிரமே, மதிப்பரிய நிதியே ! வேந்தே.
நீசன்–எனை ஆண்டு கொண்ட நிறைவே, தூயா !
நித்தியமே, சத்தியமே ! காதல் கொண்டேன்.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்.

**அந்தணர்கள் :**
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்.
சிவ சிவ என்னச் சிவ கதி தானே.

**நந்தனர் :**
சிவ சிவ சிவ சிவ செந்தமிழ் நாதா
சிவ சிவ சிவ சிவ தேவர்கள் தேவா.
உவமை இலாத உயர் பர நாதா
தவ நிறை சார்பினர் தத்துவ போதா.

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவனே
சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவனே.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ இவ்வாறே பாடிக்கொண்டு நந்தனார் கோபுர வாசலின் உள்ளே நுழைந்து, அப்பாலே உள் இருக்கும் பல்வேறு மண்டபங்களையும் தாண்டிச் சென்று அப்பாலே, அப்பாலே நடந்து சென்றவர் மூலமூர்த்தியின் திருச்சந்நிதானத்துக்கும் சென்று, அப்பாலே திருப்படியையும் தாண்டி உள்ளே போகிறார். அப்போது பேரொளி ஒன்று மின்னுகிறது. அந்தணரும் மற்றையோரும் அரோகரா ஒலி எழுப்புகிறார்கள். நந்தனார் மறைந்து விடுகிறார். மூன்று நாலு வினாடிகளுக்குப் பேரமைதி குடி கொள்கிறது. ]

**அந்தணர்—1 :** நந்தனார்........

**அப்பு தீட்சிதர் :** ஆமாம். நடேசராய்ப் போனார்.

**அந்தணர்—` :** எந்தையாரே அவர்.

**அந்தணர்—1 :** அவரே இவராம்.

**அப்பு தீட்சிதர் :** ( சாந்தமயமான மாட்சிமை கனத்த குரலில் )
வந்த பயண வழி நடை முடிந்தது.

**அந்தணர்—3 :** இனிமேல் என்ன ?

**அந்தணர்—1 :** எல்லையே இல்லா
நெடியதோர் ஓய்வு.

**அப்பு தீட்சிதர் :** நித்தியானந்தம்.

**வள்ளி :** ( அற்புதமும் அங்கலாய்ப்பும் மிக்க செய்வதறியாமை விரவிய குரலில் விம்மியவாறு )
அண்ணா, அண்ணா !

**மூத்தார் :** அழாதே, வள்ளி.

**அப்பு தீட்சிதர் :** அண்ணனார் இனிமேல் அரனார் திருவடி
நீழலில் அமரும் நீங்கா வாழ்வினர்.
பிறவிப் பெருங்கடல் நீந்தினார் பெற்ற
இறைமையை நேரிலே எங்கள் கண்ணாற்
கண்ட புண்ணியம் கணக்கிடற்கரியதே.

**அந்தணர்—2 :** எண்ண எண்ண இனிக்கும் அக்காட்சி,
அண்ணல் காட்டிய அருட்டிற மாட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பு தீட்சிதர் : அண்டம் எல்லாம் ஆட்டியே ஆடும்
ஒண்டொடி பங்கினர் உள்ளம் நயந்தே
ஆட்கொண்டருளினர் ஆதனூர் நந்தரை.
உய்ந்தோம் நாங்கள் ; ஒருவர் தவத்தினல்
வெந்தே போனது எம் வினை எலாம்.

[ சொறியன் வேர்த்து விறுவிறுத்து ஓடோடி வருகிருன். ]

அப்பு தீட்சிதர் : வந்தது ஆர் ?

மூத்தார் : சொறியனு ? என்ன ?

சொறியன் : சுவாமியார் எங்கே ?

அந்தணர்—1 : நந்தனர் சிவனர் — நடேசராய் ஆயினர்.

மூத்தார் : ஆதனூர் இருந்து நீ அத்தனை வேகமாய்
ஓடி வந்ததேன் ? சேதி யாதேனும்........

சொறியன் : உண்டுண்டையா !

அப்பு தீட்சிதர் : உற்றதைக் கூறுக.

சொறியன் : நந்தனரிடமே நல்லுபதேசம்
கேட்ட வேதியர்........

மூத்தார் : ஆண்டையார்........

சொறியன் : வீட்டினுள்
நிட்டை கூடினர்.

அப்பு தீட்சிதர் : நித்திய வாழ்வினை
அவருமா பெற்ருர் ?

அந்தணர்—1 : அரனர் திருவுளம்.

அப்பு தீட்சிதர் : எண்ணிய எண்ணியாங்கு எய்திய நந்தனர்
புண்ணிய காதை புவியெலாம் பரவுக.

[ மேடை மெல்ல மெல்ல இருள்கிறது. அப்பு தீட்சிதர் மீது மட்டுமே புள்ளி வெளிச்சம் அடிக்கப்படுகிறது. முன்னர் நந்தனரை வரவேற்றுப் பேசியபோது இருந்த பிரசங்க பாணி அவரது பேச்சிலே மீண்டும் வந்து சேர்கிறது. ]

சிவனடி பரவும் செம்மை மனத்தினேர்
தவநிறை பெரியவர் சால்பு பொலிக.
எவரும் என்றும் இத் திருத் தில்லையின்
உவமை இலானை உள்மகிழ்ந்து ஏத்துக.
முறுகிய காதலின் முழுமையும், விழுமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமையேயாம் என யாவரும் உணர்ந்தே
அன்பும் அறனும் அணைந்தவராகிப்
பண்பும் பயனும் நண்பும் உடையராய்த்
தூயதோர் இனிய சூழலில் வாழ்க.

[ இப்போது வெளிச்சப்பொட்டு அந்தணர்—1 மீதும் விழுகிறது ]

அந்தணர்—1 : ( பரவசமாகி )
ஈசனார் திருவருள்........

பல குரல் : எங்கும் பொலிக.

அப்பு தீட்சிதர் : பாசம் அறுத்த பண்புடை நந்தரின்
வீசு புகழும் வென்றியும் வாழ்க,
தில்லை நடேசனின் திருப்புகழ்

பல குரல் : எல்லாத் திசையிலும் எழுச்சி பெறுகவே.

[ திரை விழுகிறது ; சூத்திரதாரன் தோன்றுகிறான். ]

சூத்திரதாரன் : அரனார் திருவுளம் அப்படி இருந்தது.
பரமநெறியிலே படர்ந்தவர் நந்தனார்.
ஆதனூர் நந்தரின் அழகிய சரிதையில்
சாதியின் கடும்பிடி தளர்ந்தமை கண்டோம்.
பிறப்பின் வழியிலே பேசும் சாதியின்
இறுக்கம் சற்றே இளக்கம் கண்டது.
ஆயினும், பின்னர் மறுபடி பழமையே
வெற்றி கொண்டது; வேற்றுமை தொடர்ந்தது.
இக்காலத்து மனிதர் நாம் — இன்றும்
சாதி வேற்றுமைத் தடிப்பைப் பார்க்கிறோம்.
இன்றைய இலங்கையில் இருப்பன பல ஊர்
ஒவ்வோர் ஊரிலும் உள்ளன கோயில்.
கோயில் தோறும் கோபுர வாசல்.
கோபுர வாசலில் குழப்பமும் பூசலும் !
அப்படிப் பட்டதோர் கோபுர வாசலை
இப்பொழுதிங்கே இனி நாம் காண்போம்.

[ திரை விலகுகிறது. ஈழத்துச் சிற்றூர்க் கோயில் ஒன்றின் கோபுர வாசல். சந்தடியும் பூசலும் நடக்கின்றன. கோயிட்குட் செல்ல முயலும் ஒரு சார்பு மக்களை இன்னொரு சாரார் தாக்கி அடக்க முயலுகிறார்கள். ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— விடாதே உள்ளே.
— வெட்டு.
— கொத்து.
— அடியடா பள்ளனை.
— ஆரது ?
— சுடு, சுடு.
— போவோம்.
— மறிப்போம்.

[ துப்பாக்கி வேட்டு. குழறல் — கூச்சல் — ஓலங்கள். ]
— புலையனை கொல்வோம்.

[ குருக்கள் ஒருவர் ஐந்தாறு தடித்த பழங்கொப்பிகளோடு வருகிறார்.

**குருக்கள் :** ஆகம விரோதம். அடாது நீர் செய்வது.

[ சைவப் பெரியார் ஒருவர் கைத்தடியுடன் மிடுக்காக வண்டியைத் தடவிக் கொண்டு மக்கள் மத்தியில் நிற்கிறார். ]

**பெரியார் :** தேச வழமையைச் சிதைப்பதா? விடோம் நாம்.
கோட்டிலும் ஏறி எம் கொள்கையை நாட்டுவோம்

**குருக்கள் :** பஞ்சமர் நீங்கள். பகவான் உறையும்
ஆலயம் புகுதல் ஆகம விரோதம்.
கோயிலின் தூய்மையும் குறைபாடு அடையுமே !
ஆகையால் வராதீர், அப்புறம் ஓடுவீர்.

[ மக்கள் மத்தியிலிருந்து ஓர் இளைஞன் குருக்களை அணுகுகிறான். குருக்கள் பயந்து பின் வாங்குகிறார். இளைஞன் அவரை வணங்குகிறான். ]

**இளைஞன் :** சிற்றூர்க் கோயிலின் திருப்பெருந் திருவே !
குக்கிராமத்துக் கோயிலின் குருவே,
ஐயரே, மெய்யரே ! ஆயிரம் வணக்கம்.
ஒரு சில கேள்விகள் — பதில் தரல் வேண்டும்.

பஞ்சமர் என்று நீர் பகுத்துக் காட்டுவோர்
நித்தியா சௌசிகள் என்றும் அதனால்,
பிறப்புத் தொடங்கி இறப்பு வரைக்கும்
துடக்குப் பிடித்த துர்ச்சனர் என்றும்,
கோபு வாசலைத் தாண்டி அப்பாலே
நுழைந்தால், புனிதம் நொடித்திடும் என்றும்
ஆகமச் சான்றுகள் காட்டுவீர் ஐயரே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியமாய், ஒரு சமுசயம் எமக்கு.
மனசார இதற்கு மறுமொழி சொல்லும்.
எத்தனை ஆகமம் எடுத்துப் படித்தீர் ?
காமிகம், யோகசம், சிந்தியம், காரணம்,
அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம்,
அஞ்சுமான், சுப்பிரபோதம் முதலிய
ஆகமம் இருபத்தெட்டு எனக் கூறுவீர்.
இத்தனை நூல்களுள் எத்தனை ஓதினீர் ?

[ குருக்கள் தலையைச் சொறிகிறார். கையிலிருந்த பழங்கொப்பிகளை மறு கைக்கு மாற்றுகிறார், பின்னர் அவற்றைக் கமக்கட்டுக்குள் வைத்துக்கொண்டு தலையைச் சொறிகிறார். ]

இளைஞன் : சங்கத எழுத்துகள் எல்லாம் தெரியுமோ ?
அருச்சனை மந்திரம் அறுபதோ எழுபதோ
திவசம், மாளயம், சவுண்டி, கிருத்தியம்,
சுற்றுப் பலிக்கெனச் சொல்லும் மந்திரம்
யாக பூசைகள் — இவற்றைப் போன்ற
தேவையின் பொருட்டு நீர் மூன்று கொப்பிகளில்
எழுதி வைத்திருக்கும் பத்ததி தவிர
எந்த ஆகமமும் முழுமையாய் ஓதி
உணர்ந்துகொண்டீரோ? உண்மையைச் சொல்லும்
சங்கத எழுத்துகள் எல்லாம் தெரியுமோ ?
ஆகமம் ஆகமம் என்று வெருட்டுவீர்,
தில்லையில் இன்று சிவனே இல்லையோ ?

[ பலரும் திடுக்கிட்டுப் பின்வாங்குகிறார்கள். ]

இளைஞன் : எங்கள் சிற்றூர் இறையவன் கோயிலின்
கதவுகள் திறந்தால், அரிசனர் நுழைந்தால்,
அங்கவன் சந்நிதி அசுசிப் படும் என
எம்மவர் நம்ப எடுத்துச் சொல்கிறீர்.
தில்லை எனப்படும் சிதம்பரம் தெரியுமா ?
கோயில் எனப்படும் கோயிலின் கோயில்.
கபாடம் திறந்தன கவிழ்ந்ததா, உலகம் ?
சிதம்பர நடம்பயில் செழுங்கழல் இறைஞ்சுவோர்
சாதி மறந்து சைவம் நாட்டினார்.
அன்பே சிவம் எனும் அறநெறி காட்டினார்.
செந்தூர் திறந்தது ; மதுரையும் திறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பரங்குன்றமும் பழனியும் திறந்தன.
பிறப்பினுல் இழிவு பேசும் பேதைமை
அறுப்பதே அறம் என ஆன்ருேர் ஒப்பினுர்.
இது நடந்தேறியும் பல பத்தாண்டுகள்
சென்று மறைந்தன; சிவ சிவா, சிவ சிவா !!
எந்த உலகிலே இருக்கிறீர் ஐயரே ?

[சைவப் பெரியார் தடியை ஓங்குகிருர். இளைஞன் அதைப் பொருட்படுத்தவில்லை. ஓங்கிய தடியைத் தாழ்த்திவிட்டு, இளைஞன் தொடர்ந்து பேசுகிருன்.]

இளைஞன் : நீர் விதந்தோதும் ஆகமப்படியே
அரிசனர் நுழைவதால் ஆலயம் கெடுமேல்,
தில்லையில் இன்று சிவனே இல்லையோ ?

[இளைஞனின் பக்கத்தார் சிலர் குருக்களையும் பெரியாரையும் தாக்குவதற்குப் போல முன்னேறுகிருர்கள். இளைஞன் அவர்களைத் தடுத்து நிறுத்திவிட்டுத் தொடர்கிருன்.]

இளைஞன் : ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும் என உரைக்கும் நீர்
பக்கபலமாய்க் கொள்ளும் உம் துணைவர்
எப்படிப்பட்ட ஒழுக்கம் உடையவர் ?
நெத்தலிப் பொரியல் நித்தமும் மெல்வதில்
மெத்த விருப்புடை மேலவர் எல்லாம்
உள்ளார் அல்லரோ, உமக்குத் துணையாய் ?
இன்னும் இவர்போல் எத்தனை பேரோ ?
பல்லு நலிந்த பான்மையால், பாக்குரல்
தேடி அதற்குள் நெத்தலி இடித்துத்
தூளாய் விழுங்குதல் சுத்த சைவமோ ?

[சைவப் பெரியாருக்குக் கோபம் வருகிறது. பின்னர் தலை குனிகிருர். பின்னும் அங்கு நிற்கமாட்டாமையால் மெல்ல நழுவுகிருர். குருக்களும் நழுவப் பார்க்கிருர். ஆனுல் மக்கள் அவரை மறித்துக் கொள்கிருர்கள்.]

இளைஞன் : உமக்குத் துணையாய் உள்ளவர் ஒருவரும்
கள்ளுக் குடிப்பதே இல்லையோ ? இருக்கலாம்.
சமய தீட்சை பெற்று, நித்தமும்
சந்தியா வந்தனம் தவருர் சிலரோ ?
இருக்கலாம்; எல்லாம் இருக்கலாம் ஆயினும்,
தன்னெஞ்சறிவது பொய்யா நடுநிலை
என்னென்பதனை நீர் இம்மியும் அறிவிரோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ உயர்சாதிக் கும்பலைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவராக நழுவுகிறார்கள். ஐயர் மட்டுமே தனித்து விடப்படுகிறார். ]

இளைஞன் : குக்கிராமத்துக் கோயிலின் குருக்களே !
மறுமொழி என்ன ? வணங்கி நாம் கேட்கிறோம்.

[ குருக்கள் கூசிக் குறுகித் தடுமாறுகிறார். ]

இளைஞன் : கோபுர வாசலைக் கடந்து உள் நுழைந்திட
எண்ணுவோர் நாத்திகர் என்கிறீர், ஐயரே !
சைவத் திருமுறைச் சான்றுகள் கண்டால்,
நீரே நாத்திகர்: நிறுவலாம் இதனை.
கோயிலின் கோயிலாம் கோயிலே தில்லை.
தில்லையில் இன்று சிவனே இல்லை
என்ற பாங்கிலே எண்ணும் நீரே
நூற்றுக்கு நூறு நாத்திகர் ஆவீர்.

[ குருக்கள் முகத்தைத் திருப்பிச் சோர்வோடு பின்வாங்குகிறார் ]

இளைஞன் : ஆகையால், ஐயரே ; அகந்தை எனப்படும்
சைவ விரோதம் தவிர்த்தல் வேண்டும்.
சைவ விரோதம் தவிர்த்திடுவீராயின், உம்
சாதி பேதம் உட்பட, தகாத
அநீதி அனைத்தும், அறம் தரும்
பெரும் புயலிடையே துரும்பெனத் தொலையுமே.

[ எல்லோரும் இளைஞனைச் சூழ்ந்து கொள்கிறார்கள் திரை விழுகிறது. ]

முற்றும்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
SRI LANKA
119814



ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
SRI LANKA

ARCHIVES

University of Jaffna
119814
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

........எவ்வாறு இருந்தபோதிலும் ஈழநாட்டு இலக்கியத்தைப் பொறுத்தவரையில் முருகையனுக்கு ஒரு தனியிடமுண்டு.. ஏனெனில் அவர் கவிதைகள் இலக்கியமாக மட்டும் நில்லாமல், வளர்ந்துவரும் ஈழக்கவிதைத் துறையின் பொருள் மரபும் செய்யுள் மரபும் எவ்வெவ்விதமான பரிணமத்துக்காளாகி வந்துள்ளன என்பதைக் கூறும் சாசனமாகவே விளங்குகின்றன. வரலாற்றைச் சமைப்பவனக—புதிய சகாப்தத்தை உருவாக்குபவனுக—எழுச்சிகொண்ட புரட்சிக் கவியாக ஒருவன் விளங்கும்போது, அவன் வரலாற்றில் வாழ்பவனுகி விடுகிறுன். வரலாறு நிகழ்கால வாழ்வின் அத்திவாரமாகிவிடுகிறது. முருகையனும் இங்கு சிறப்பான பணி செய்திருக்கிறுர் என்றே கூறல் வேண்டும்.

நிகழ்காலத்திற் காலூன்றி, அதன் வரலாற்றுப் பாதையின் மாற்றங்களையும், எதிர்கால மாறுதல்களையும் கவித்துவ தீர்க்கதரிசனத்துடன் நோக்கும் அதேவேளையில், நிகழ்கால வாழ்வின் அகப்புறத் தாக்குதல்களை அவர் நோக்கும் கோணம் புதியது. காலத்தின் தேவையைப் பூர்த்திசெய்யும் நன்னேக்கு என்றே கூறல் வேண்டும்.

ஆசிரியர் கவிதைகளில் 'தொய்வன' என்பதே கிடையாது. இறுக்கமான சொற்கோவைகள், ஆங்கிலக் கவிகளிடம் காணப்படுவது போன்ற சிக்கனமான கருத்துத் தெறிக்கும் வைரமணிக் கோவையான எழுத்து........

—செம்பியன் செல்வன்

குமரன் அச்சகம். 201, டாம் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org